சூலை - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2045

# செந்தமிழ்

தொகுதி : 58
பகுதி : 8

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரைத் தமிழ்ச்சங்கம்,
செந்தமிழ்க் கல்லூரியின
பெற்றோர் ஆசிரியர் சங்க விழா
மற்றும் முதலாமாண்டு மாணவர்கள்
வரவேற்பு விழாவில் சிறப்பு
விருந்தினராக மதுரை மாநகரக்
காவல்துறை உதவி ஆணையாளர்
திருமிகு. முனைவர்.
ஆ. மணிவண்ணன் அவர்கள்
கலந்து கொண்டார்கள். உடன்
செந்தமிழ்க் கல்லூரிச் செயலர்
திருமிகு. கோச்சடை இரா. குருசாமி
அவர்கள், மதுரைத் தமிழ்ச்
சங்கத்தின் செயலர் திருமிகு.
இரா. அழகுமலை அவர்கள்,
செந்தமிழ்க் கல்லூரித் தலைவர்
திரு. சு. வீரணசாமி அவர்கள்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்
துணைத் தலைவர்
திரு. க. முத்தையா பசும்பொன்
அவர்கள் மற்றும் முதல்வர்
முனைவர் மு.மீனா அவர்கள்.

# செந்தமிழ்

( தோற்றம் 1903 )


தொகுதி : 58

பகுதி : 9

சூலை : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045




வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10.000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அற இலக்கியங்களில் தொன்மம் | ச. முருகன் (எ) சுடலை | 4 |
| அந்த வாழ்வு விரையுமா? | வை.பூ.சோமசுந்தரம் | 12 |
| இரட்டைக் காப்பியங்களில் முற்பிறப்புச் சிந்தனை மரபு | முனைவர் மு. மீனா | 13 |
| வானம் ஒரு வகுப்பறை | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 24 |
| பாவேந்தர் மறுபக்கம் | தமிழாகரர் தெ. முருகசாமி | 25 |
| வளாகச் செய்திகள் | முனைவர் மு. மீனா | 28 |
| புலவரைச் சுமந்த மாமன்னர் | கி.வ.சு. ஜெகஜோதி | 29 |
| கம்பர் எழில்பா, ஏரெழுபது? | புலவர் சி. பாண்டுரங்கன் | 31 |
| விலங்கு | புலவர் ஆறுவிரல் ஐம்பொறி | 40 |

# இதழ் மணம்

அன்புடையீர்!

வணக்கம். இலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் தாய்த்தமிழின் இலக்கியங்களை ஆய்வு செய்யும் போக்கில் இம்மாத இதழ்க் கட்டுரைகள் அமைந்துள்ளன.

களப்பிரர் காலத்தில் தோன்றிய அற இலக்கியங்களைப் படைத்த படைப்பாளர்கள், தங்களை நடுநிலையாளர்களாகக் காட்டிக் கொள்ள பயன்படுத்திய உத்திகளுள் ஒன்றாகத் தொன்மங்கள் திகழ்வதைத் திரு. ச. முருகன் (எ) சுடலை அவர்கள் “அற இலக்கியங்களில் தொன்மம்” என்ற ஆய்வுக் கட்டுரையில் நுணுக்கமாக வெளிப்படுத்தியமை பாராட்டிற்குரியது.

செவ்விலக்கிய வரையறையில் அமைந்துள்ள இரட்டைக் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள முற்பிறப்புச் சிந்தனையானது, 'பழம்பிறப்பில் செய்த வினையின் பயனை யாவரும் நுகர்ந்தே தீர்த்தல் வேண்டும்' என்ற வினைக் கோட்பாட்டைப் புலப்படுத்தும் திறத்தை முனைவர். மு. மீனா அவர்கள் நுட்பமாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள பாங்கு போற்றுதற்குரியது.

தமிழாகரர் திரு. தே. முருகசாமி அவர்கள் தன் ஆய்வுக் கட்டுரையில், புரட்சியாளராகப் போற்றப்படும் பாரதிதாசனிடத்து காணப்படும் ஆன்மிகச் சிந்தனையைப் பாரதிதாசனின் மறுபக்கமாகக் காட்டியுள்ள பாங்கு சிறப்புடைத்து.!

கம்பர் இயற்றிய ஏரெழுபது எழில்அமுதாகத் திகழ்வதைப் புலவர் திரு. சி.பாண்டுரங்கன் அவர்கள் பாடல் சான்றுகளுடன் காட்டியுள்ள திறம் பாராட்டிற்குரியது.

வள்ளுவப் பெருந்தகையின் ஒவ்வொரு சொல்லாகத் தேர்ந்தெடுத்து நுணுகி ஆராய்ந்து அவரின் சொல்லாற்றல் திறனைத் தொடர்ந்து வெளிக்காட்டி வரும் புலவர் திரு. ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் ஆய்வுத்திட்பத்திற்கு மனமார்ந்தப் பாராட்டுகள் உரித்தாகிறது.

கவிவேந்தர் திரு. வேழவேந்தன் மற்றும் நல்லாசிரியர் திரு. சோமசுந்தரம் ஆகியோரின் கவித்தேன் தித்திக்கிறது.

புலவரைச் சுமந்த மாமன்னர் என்று மன்னர் பாஸ்கர சேதுபதியைப் புகழ் பாடிய திரு. ஜெகஜோதியின் கருத்துரையை வெளியிட்ட தினமணி நாளிதழுக்கு நன்றி.

செந்தமிழ் இலக்கியத்தின் ஆழ்ந்த பொருள் நுட்பத்தை வெளிக்கொண்டு வாசகர்களின் கையில் செந்தமிழ் இதழ் தவழ்வது கண்டு மகிழ்கிறோம்.

- ஆசிரியர்

# அற இலக்கியங்களில் தொன்மம்

ச. முருகன் (எ) சுடலை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சமூக எண்ணத்தின் வெளிப்பாடாய்த் தோன்றும் இலக்கியங்கள் மனிதனைப் பண்படுத்தும் காரணியாகவும், வரலாற்றுக் களஞ்சியமாகவும் திகழ்கின்றன. இலக்கியங்கள் கலை முயற்சியாக இருந்தாலும் மக்களை நல்வழிப்படுத்தும் அறங்களையும் அவை கூறுகின்றன. அவ்வறங்கள் தோன்றுவதற்குச் சமூகம் பின்புலமாக இருக்கின்றது. அப்பின்புலங்களில் ஆளும்வர்க்கமும், சமய நெறிகளும் இயங்கு சக்திகளாக விளங்குகின்றன. அவ்வாறு தோன்றும் இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளர்கள் தங்களை நடுநிலையாளர்களாகக் காட்டிக் கொள்ளப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்துவர். அவ் உத்திகளில் ஒன்று தொன்மப் பயன்பாடாகும். களப்பிரர் காலத்தில் தோன்றிய அற இலக்கியங்களைப் படைத்துள்ள படைப்புகளில் இத் தொன்மங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அறம் - சொல் விளக்கம்

அறம் என்ற சொல் அறு + அம் எனப் பிரிந்து அறம் எனப்பட்டது. அறு என்ற வினைச் சொல்லின் அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. அறு என்பதற்கு "வழியை உண்டாக்கு, வழியை உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து, சட்டம், நடத்தை, தகுதி, மரபு, செயலாட்சி, கொள்கை முறை, ஒழுங்கு, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன்" எனப் பல பொருள்படும். வெற்றித் தமிழகராதி அறம் குறித்து முப்பத்திரண்டு பொருள்களில் விளக்கம் தருகின்றது. அறம் என்னும் சொல்லிற்குத் தமிழில் "ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம், அறக்கடவுள், சமயம்" என எட்டு வகையான பொருட்களை விளக்கமாகத் தருகின்றது. அறன் என்பது வாழ்வியலின் ஒழுக்க நெறிகளை நீதியாகப் போதிப்பதாகும். இவ்வறக் கூறுகள் மனித சமூகம் வாழ்வியல் அனுபவங்களிலிருந்து பெறப்பட்டாலும், ஆளும் வர்க்கத்தாலும் சமயச் சூழல்களாலும் தீர்மானிக்கப்படுகின்றன. இவ்வறம் காலந்தோறும் மாறக்கூடிய ஒன்றாகும். மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளே அறங்களாகப் பின்பற்றப்படுகின்றன. இத்தகைய அறங்களை வலியுறுத்திக் கூறுவதற்கு வரலாற்றுப் புராணச் செய்திகளிலிருந்து பெறப்பட்ட தொன்மங்களைப் பயன்படுத்தும் போக்குப் படைப்பாளர்களிடம் காணப்படுகிறது.

## தொன்மம்

மனிதனால் புனையப்பட்ட கதைகளே தொன்மம் எனக் குறிக்கப்பட்டன. தொன்மம் என்பது உண்மை நிகழ்ச்சியைப் போன்றே உள்ளத்தைத் தாக்கக் கூடியதாகும். இயற்கைத் தோற்றம், மனிதனின் பிறப்பு மற்றும் இன்னபிற கூறுகளின் தோற்றம் பற்றிக் கூறுவது ஆகும். இவற்றுள் மீவுயர்க் கற்பனைகளும் மரபு வழிப்பட்ட கதையாடல்களும் தொன்மங்களாக வழங்கப்படுகின்றன. தொன்மங்கள் பண்பாடு, நாகரிகம், தனிநீர்மை, பழக்கவழக்கம், விரதம், சமயம், ஒழுக்கம் போன்றவற்றை அறிய உதவுகின்றன. தொன்மங்கள் எங்குத் தோன்றின என்பதை அறிய முடியாவிட்டாலும், அவை மக்களின் எண்ணங்களில் வளர்ந்து கதையாகவும், விதையாகவும் வாழ்வு பெற்று, கலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளன. தொன்மங்கள் பொதுவாகக் கதையாடலின் கூறுகளில் தோன்றி நம்பிக்கையாகவும் மரபாகவும் பின்பற்றப்படுகின்றன. இவை பெரிதும் கடவுளைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டு வருபவைகளாய் நம்ப முடியாதவைகளாய் மீவுயர்ப் புனைவுகளாய் காணப்டுகின்றன. இதன் வாயிலாகத் தொன்மங்கள் கடவுள் பற்றிய புனைகதையாகவும், சமயச் சடங்குகள் பற்றிய புனைவுகளாகவும் இருப்பதை உணர முடியும். அடிப்படை நியதிகளைக் கற்பிப்பதற்காகத் தோன்றிப் பல்வேறு மனித இயக்கங்களைக் கொண்டு வளர்ந்துள்ளவைகளாகத் தொன்மங்கள் விளக்கப்படுகின்றன.

**“தொன்மங்கள் எப்படித் தோன்றியிருக்கும் என்று அறிய முடியாத கதைகள், யாராலும் தோற்றுவிக்கப்படாதவை, சமய நம்பிக்கைகளை விளக்குவதற்குத் துணைபுரியக்கூடியவை, பெரிதும் கடவுளைப் பற்றிய, வீரநாயகர்களைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டு வருபவை, அவை நம்ப முடியாதவை-யாகவும், மீவியல்புத் தன்மை உடையவையாகவும் இருக்கும்.....”** (Dictionary of Modern Critical Terms) என்னும் கருத்து தொன்மத்தின் தன்மை குறித்தும், அதன் தோற்றப் பின்புலம் குறித்தும் விளக்குகிறது.

## தொன்மவியல்

தொன்மவியல் இரண்டு பொருள்களில் வழங்கப்பட்டு வருகிறது. ஓர் இனத்தின் அல்லது குழுவின் தொன்மங்களைக் குறிப்பதற்கும், தொன்மங்களை அறிவியல் மற்றும் வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து அறிவிப்பதற்கும் என இரண்டு தளங்களில் தொன்மவியல் என்னும் சொல் கையாளப்படுகிறது. எனவே, தொன்மம் என்ற சொல்லைப் போலவே

தொன்மவியல் என்ற சொல்லையும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இங்குத் தொன்மவியல் என்பது தொன்மம் சார்ந்த கூறுகளை ஆராய்வதாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

## சமயமும் தொன்மமும்

கடவுளர் பற்றிய கதைகள், கடவுள் குறித்த வரலாறுகள், குறியீடுகள், புனிதத்தன்மை கற்பிக்கப்பட்ட கதையாடல்கள் எனத் தொன்மங்கள் சமயம் சார்ந்தே இயங்கியிருக்கின்றன. எனவே, சமயமும் தொன்மமும் ஒன்றோடொன்று நெருங்கிய உறவுடையனவாய் அமைந்துவிடுகின்றன. தொன்மம் சமயத்தின் தொடர்புச் சாதனமாகச் செயல்படுகிறது. அது சமய நம்பிக்கைகளையும், மதிப்புகளையும் வெளிப்படுத்தி விளக்குவதோடு சமூகத்தார் அவற்றை ஏற்கவும் வழி செய்கிறது. தொன்மங்கள் சமயத்தை மனிதப் பண்பாட்டில் பரவச் செய்யும் போக்குடையதாக அமைவதோடு, சடங்குகளும் சாத்திரங்களும் விளக்குகின்ற சமய மரபுகளை இயல்பாக எடுத்துரைக்கவும் செய்கின்றன. இவற்றின் வழி தொன்மம், சமயம், சடங்கு இம்மூன்றும் ஒன்றையொன்றுத் தழுவி நிற்கின்றன எனவும், தனித்தோ அல்லது எதிர்நிலையாகவோ இல்லை என்றும் கூற முடிகிறது. கதிர் மகாதேவனும்,

**"ஆன்மீக உலகில் குறிப்பிடத்தக்க உண்மைகளையும் நுண்மைகளையும் தொன்மம் (Myth) தன்னுள் தேக்கிவைத்துள்ளது எனலாம். சமயச் சார்புடைய எந்தப் படிமமாயிருந்தாலும், அந்தப் படிமம் தொன்மத்தோடு ஒட்டி உறவாடியிருப்பதைக் காண்கிறோம். தொன்மத்தை விடுத்துச் சமயத்தை ஆய்வோர் உருவத்தை விடுத்து நிழலை ஆய்பவர் ஆவார். சமயத்தின் ஆழ்ந்த நுண்ணிய நோக்கு, அடிப்படைக் கருத்துக்கள் யாவும் தொன்மத்தில் தோய்ந்து கிடப்பதைக் காணலாம்" (கதிர் மகாதேவன், தொன்மம், ப. 17.)**

எனத் தொன்மத்தையும் சமயத்தையும் பிரித்துப் பார்க்கக் கூடாது என்று கூறுகிறார். இந்தியத் தொன்மங்கள் சமணம், பௌத்தம், சைவம், வைணவம் முதலிய சமயங்களோடு இணைத்தே நோக்கப்படுகின்றன. எனினும் எல்லாத் தொன்மங்களையும் சமயச் சார்புடையன என்று கூறிவிட முடியாது. இவ்வாறு தொன்மக் கருத்துக்களை அற இலக்கியங்களும் தங்களின் கருத்துப் பரப்புதலுக்கு எடுத்தாளுகின்றன. களப்பிரர் காலச் சமயங்களான சமணம், பௌத்தம், வைதீக மதங்கள் தங்களின் மதப் பரப்புதலுக்கும் தொன்மங்களைக் கையாண்டுள்ளன என்பதை அற இலக்கியங்களின் வழி அறிய முடியும். தொன்மங்களில்

கடவுள், ஆண்டவன், இராமன், மாயோன், நீலகண்டன் எனத் தெய்வம் சார்ந்த தொன்மங்கள் பலவாக இருக்கின்றன. இத்தெய்வத் தொன்மங்களை அற இலக்கியங்கள் தங்களின் கருத்து வலியுறுத்தலுக்குப் பயன்படுத்தியுள்ளன. தெய்வம் என்பது மனிதனின் படைப்புச் சக்தியாகக் கருதப்படுகிறது. அத்தெய்வம் உலகின் அனைத்துச் சக்திகளுக்கும் முதன்மையானதாகக் கருதும் வழக்கம் இருக்கின்றது. மனிதச் செயல்களை ஒப்பிட்டு நோக்குகிற பொழுதும், மனிதர்களுக்கு அறவுரை சொல்லுகிற போதும் தெய்வத்தின் செயல்களைச் சுட்டுவர். அவ்வாறு தெய்வம் குறித்துப் பேசும் அற இலக்கியங்கள், அறத்துடன் வாழ்பவர்கள் தெய்வத்தோடு ஒத்தவர் எனப் பேசுகின்றன. அதனை வள்ளுவரும்,

> **“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
> **தெய்வத்துள் வைக்கப் படும்”** குறள். 50

என மனிதனின் செயல்களைத் தெய்வத்தோடு ஒப்பிடுகிறார். அறத்தின்படி வாழ்வு நடத்துபவன் வானில் இருக்கின்ற தெய்வத்தோடு ஒப்பிடக் கூடியவன் என்கிறார். இங்கு மனிதச் செயல்கள், பண்புகள் அறத்தின் வழியது என்கிற நோக்கில் பார்க்கப்படுகிறது. மேலும், “தெய்வம் தொழாஅள்...” என்னும் அடியில் தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுபவள் என்கிற கருத்தில் கையாளப்படும் போது, தெய்வம் என்பவன் கணவனே என்கிற நிலையில் வள்ளுவர் தொன்மத்தைப் பதிவு செய்கிறார். மனிதருக்குத் தெய்வம் என்பது எது? தமது பாதுகாவலுக்கு உரியவன் என்கிற கருத்தை வள்ளுவர் பதிவு செய்யும் போக்கில் மேற்கண்ட குறளைக் கூறியுள்ளார். வள்ளுவர் தெய்வத்தை முன்னிறுத்தாமல், மனிதப்பண்புகளை முன்னிறுத்தி அவனின் செயல்களைத் தெய்வத்தோடு ஒப்பிடுகிறார். அதற்காகத் தெய்வம் என்கிற தொன்மத்தைக் கையாளுகிறார். நான்மணிக்கடிகை, “மதிமன்னு மாயவன் வாள்முகம் ஒக்கும்” எனவும், சிறுபஞ்சமூலம், “முற்றினான் ஆகும் முதல்வன் நூல் பற்றி” எனவும், இன்னாநாற்பது, “சக்கரத்தானை மறப்பின்னா வாங்கின்னா” எனவும், இனியவைநாற்பது, “முந்துறப்பேணி முகநான்குடையானை” எனவும் தெய்வம் குறித்துப் பேசுகின்றன. இவ்விலக்கியங்களில் திருக்குறள் தெய்வத்தை முன்னிறுத்தாமல், மனிதர்களின் பண்புகளைத் தெய்வத்தோடு ஒப்பிடுகிறது. மற்ற இலக்கியங்கள் தெய்வத்தை முன்னிறுத்தி மதிப்பளிக்கக் கூறுவதோடு, மனிதர்களில் யார், யாருக்குத் தெய்வம் என்பதையும் கூறுகின்றன.

## சாதியும் தொன்மமும்

இந்தியச் சமூக அமைப்பு சாதிகளால் ஆனது. இந்திய அரசியல்

அமைப்பின்படி, ஒருவர் மதம் மாறலாம் சாதி மாற முடியாது. சாதி, சமயத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பதால் சமயமும் தொன்மமும் எவ்வாறு இணைந்துள்ளதோ, அது போலவே சாதியும் தொன்மங்களும் இணைந்தே இருக்கின்றன. சாதியத்தை வலியுறுத்தவும், வளர்க்கவும், பரப்பவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும் சாதியத் தொன்மங்களைச் சமூக அமைப்புகள் பயன்படுத்துகின்றன. சாதி குறித்த புராணக்கதைகளும், நம்பிக்கைகளும் இதற்குச் சான்றுகளாகும். களப்பிரர் கால இலக்கியங்களில் காணப்படும் தொன்மங்கள் இப் பின்புலத்தில் இயங்குபவைகளேயாகும்.

## அற இலக்கியங்களில் தொன்மம்

களப்பிரர் காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்கள் அற இலக்கியங்கள் எனப்படுகின்றன. இவ்விலக்கியப் படைப்புப் பின்புலத்தில் தொன்மங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ் மரபு சார்ந்த சமூகத்தில் பிற இனத்தவரின் வருகைக்குப் பின் நிகழ்ந்த மாற்றங்களின் பின்புலத்தில் தோன்றிய இலக்கியங்கள், இம்மாற்றத்திற்கான தரவுகளை எடுத்து வைக்கின்ற போது அவற்றை வலியுறுத்திச் சொல்வதற்குத் தொன்மங்களைக் கையாண்டுள்ளன. அந்த வகையில் களப்பிரர் கால அற இலக்கியங்களை அக்காலச் சூழலின் பிரதியாகப் பார்க்க முடியும். அப்பிரதியில் தொன்மங்கள் பலவாகக் கையாளப்பட்டுள்ளன.

## சமயத் தொன்மங்கள்

மனிதர்களின் மனத்தைச் செம்மைப்படுத்த எழுந்த சமயங்கள் காலப் போக்கில் அவர்களிடையே பிரிவினைவாதத்தையும் ஒடுக்கு-முறைகளையும் உண்டாக்கின. மனித மனத்தைப் பண்படுத்த எழுந்த புராணக் கதையாடல்கள் சமயக் கூறுகளாக மாறி இருக்கின்றன. அதனால்தான் அறிஞர்கள், "தொன்மம், சமயம்" எனும் இரு கூறுகளையும் ஒரே நிலையில் வைத்து நோக்குகின்றனர்.

"மனிதப் பண்பாட்டு வளர்ச்சியில் தொன்மம் எங்கு முடிகிறது. சமயம் எங்குத் தோன்றுகிறது என்று நம்மால் அறுதியிட்டு நிலையான ஒரு புள்ளியை வைக்க முடியாது. சமயத்தின் முழு வரலாற்றையும் பார்க்கும்போது, அது தொன்மக்கூறுகளோடு பிரிக்க முடியாத அளவிற்கு இணைந்துள்ளது. இன்னொரு பக்கம் தொன்மம் அதனுடைய பண்படாத மூலவடிவத்திலேயே பெரிய அளவில் பின்னால் மலரப் போகின்ற சமய எண்ணங்களை உட்கோளாகக் கொண்டிருக்கிறது" (திருவாசகன், ஆ. ரூ. சுரதா கல்லாடன் (தொ. ஆ).,

பாரதிதாசன் கவிதைகள், ப. 58) என்ற ஜெர்மானிய அறிஞரின் கருத்தை நோக்கும்போது, சமயத்தின் தோற்றமும் தொன்மக் கதையாடல்களின் கூறுகளும் பிரித்தறிய முடியாத இணைகோடுகளாக அமைந்து விடுவதை அறிய முடியும். கதிர்மகாதேவனின் தொன்மத்தை விடுத்துச் சமயங்களை ஆராயக்கூடாது எனக் குறிப்பிட்டதை இங்குச் சுட்டிக்காட்டும் போது, தொன்மக் கதைகள் சமய எண்ணங்களுக்கான களங்களாக அமைகின்றன என்பது விளங்கும். மேலும், மேலாதிக்கவர்க்கம், அடிமைவர்க்கத்தைச் சுரண்டலுக்கான கருவிகளாக இத்தொன்மக் கதையாடல்களைப் பயன்படுத்துவதையும் அறிஞர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறான தொன்மங்களில் ஒவ்வொரு தெய்வம்சார் தொன்மங்களின் பெயர்களையும் அத்தெய்வங்களின் தன்மைகளையும் அற இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவ்வழி பிரம்மன் படைப்புத் தெய்வம். மூன்றாம் வேத காலம் வரை பிரம்மனே முதன்மைக் கடவுளாகப் போற்றப்பட்டுள்ளான். இப்பிரம்மன் பின்னர் படைப்புத் தெய்வமாகக் கருதப்படுகிறார். இப் பிரம்மனை இனியவை நாற்பது,

**"கண்மூன்று உடையான் தாள்வேர்தல் கடிதுஇனிதே**
**தொல்மாண் துழாய் மாலை யானைத் தொழல் இனிதே**
**முந்துறப் பேணி முகம் நான் குடையானைச்**
**சென்று அமர்ந்து ஏத்தல் இனிது"**

இனியவை நாற்பது கடவுள் வாழ்த்து என முப்பெருந்தெய்வங்களைச் சொல்லுகிற நிலையில் பிரம்மனை இறுதியாகப் பேசுகின்றது. இவற்றுள் முக்கண்ணனாகிய சிவன், துழாய்மாலை அணிந்த திருமால் ஆகிய கடவுளர் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளதை உணரமுடியும்.

**சாதியத் தொன்மங்கள்**

உலகில் மனித இனங்களின் சமூக வாழ்வை உற்றுநோக்கும் அறிஞர்கள், அவர்களுக்கிடையே காணப்படும் மொழி, இனம், வர்க்கம், தேசம் எனும் பகுப்பிற்குள் உற்றுநோக்குகின்றனர். இந்தியச் சமூகத்தில் மட்டுமே சாதியம் என்ற சமூகக் கட்டமைப்பு காணப்படுகிறது. இந்துச் சமூகத்தின்மீது எழுந்த பண்பாட்டுப் படையெடுப்புகளால் அவர்களின் மதங்களும் கடவுளரும் அதிக அளவில் பெருகியிருக்கின்றன. மேலாதிக்க வர்க்கத்தினரான ஆரியர்கள் தங்களின் வேதம், இதிகாசம், புராணம் முதலிய சமயம் சார்ந்த கருவிகளால் சாதியம் என்ற புதிய கட்டமைப்பை இந்து சமயத்திற்குள் புகுத்தியுள்ளனர். எனவே, சாதியம் என்ற ஒன்று மதங்களால் கட்டி எழுப்பப்பட்ட ஒன்றேயாகும். இதனால், இந்து சமூகத்தின் மனித வாழ்வு சமயத்தோடும் சாதியத்தோடும் இணைந்தே உற்று நோக்கப்படுகிறது.

“இந்தியாவில் சமூகம் என்பது சாதியப் படிவங்களால் ஆனது. சாதியில்லாமல் ஒரு மனிதன் பிறப்பதுமில்லை, வாழ்வதுமில்லை. இந்திய அரசியல் சட்டப்படிகூட ஒரு மனிதன் மதம் மாறத்தான் முடியும், சாதி மாற முடியாது. வேறு வகையில் சொல்வதானால் மதத்தைவிடச் சாதி என்னும் நிறுவனம் பல நூற்றாண்டுகள் மூத்தது. ஆழமாக வேரோடிப் போனது. இந்த விண்வெளியுகத்தில்கூட ஒரு தனிமனிதன் கடுமையான முயற்சிகளுக்குப் பிறகே தன் சாதியின் எல்லைகளை மீறி வாழ முடியும். சாதியம் என்பது ஒரு கொடுமையான சமூகநெறி” (தொ. பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், பக். 63-64) என்பதை நோக்கும்போது சாதியம் என்பது மதத்தைவிட தொன்மையானது என்பதைவிட சாதியப் படிமங்களால் ஆனதே மதம் என்ற அளவில் உற்றுநோக்கப்படுவது உணர்த்தப்படுகிறது. எனவே, இந்து சமூகத்தில் நிலவிவரும் சமயம் சார்ந்த கதையாடலுக்குள் சாதியம் என்ற தொன்மையான கூறு நுழைக்கப்பட்டிருப்பதை அறியலாம். இதற்குத் தெய்வ வழிபாட்டு முறைகளே சான்றுகளாக அமைகின்றன.

களப்பிரர் காலத்தில் வர்ணப் பாகுபாடுகள் வாயிலாகத் தமிழகத்தில் சாதிகள் தோன்றின என்பர். ஆனால், சங்க காலத்திலேயே அதற்கான ஏற்பாடுகளும் விரிவுகளும் தோன்றின எனக் கருதமுடிகிறது. சங்க காலத்தில் மன்னர்கள் தங்களின் ஆட்சியை நிலைநாட்டிக் கொள்ளவும் தங்களின் கருத்தியல்களை மக்கள் ஏற்றுக்கொள்ளவும் புலவர்களைத் தங்களுடன் வைத்துக் கொண்டனர். அவர்களின் படைப்புகள் சாதியப் பிரிவினையைத் தொழில் அடிப்படையில் நோக்கியுள்ளது. வள்ளுவரும், மக்கள் அனைவரும் சமம் எனச் சொல்ல புகும் நேரத்தில்,

> “பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ், சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்” குறள். 972

என்கிறார். மேலோர் கீழோர் என்னும் பிரிவினை,

> “மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர் ” குறள். 973

என்ற குறளால் சொல்லுகிறார். அக்காலத்தில் இப்பிரிவுகளால் எழுந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் பொருட்டோ நியாயம் கற்பிக்கும் பொருட்டோ புலவர்கள் இவ்வாறான கருத்துக்களைப் பதிவு செய்திருக்க வேண்டும் எனக் கருதுவதற்கு இவை வாய்ப்பளிக்கின்றன.

## மொழித் தொன்மங்கள்

ஆரிய இனத்தின் வருகைக்கு முன்னர் தென்னிந்தியா முழுமைக்கும் திராவிட மொழிக் குடும்பங்கள் பரவி இருந்தன. இத் திராவிட மொழிகளுக்கு முதன்மையானதும் மூலமானதுமான ஒரு மொழியே தமிழ்மொழி ஆகும். களப்பிரர் காலத்தில் புகுந்த சமண, பௌத்த மதங்கள் பாலி மொழியால் மதக் கருத்துக்களைப் புனையாமல் தமிழ் மொழியாலேயே தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தின. தமிழ் மொழி குறித்த உயர்வான எண்ணமே அவர்களை இவ்வாறு செய்யத் தூண்டியிருக்க வேண்டும். அவ்வாறான சூழ்நிலையில் புலவர்கள் இம்மொழி குறித்துத் தங்கள் படைப்புகளில் கையாளாமல் இல்லை. அவ்வாறு மொழி என்பதை, சொல்லாகவும் உருபாகவும் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளனர். மொழியை, நுண்மொழி, வெண்மொழி, நன்மொழி (திரி. 32), புறமொழி (சிறு. 3), மென்மொழி, இன்மொழி (மேலது. 32) எனப் பல்வேறு சூழ்நிலைகளில், பலவாறு பேசுகின்றனர். மழைக் குறைவதற்குக் காரணம் கூற வருகின்ற திரிகடுகம், அதிகமாக வரி வசூல் செய்கிற அரசனும், பொய் சொல்லுகின்ற மனிதரும், கணவனுக்குத் தீங்கு செய்கின்ற பெண்ணும் ஆகிய மூவர் வாழும் ஊரில் மழை பொழியாது என்கிறார். இங்குப் பொய் என்னும் சொல் 'சலமொழி' (திரிகடுகம்) எனக் கூறப்பட்டுள்ளது. மொழி குறித்த கருத்தாடலை ஆளும்வர்க்கம் தங்களுக்குக் கீழ் இருக்கச் செய்தலுக்கான முயற்சியாகப் பயன்படுத்தும் அவ்வாறான முயற்சியில் தான் சங்கம் மருவிய புலவர்களும் ஈடுப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## முடிவுரை

களப்பிரர் காலத்தில் தோன்றிய நூல்கள் அக்காலத்தின் சமூக நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன. அவ்வெளிப்படுத்தல்களில், மக்களைத் தன்வயப்படுத்தும் முயற்சியில் படைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளதை அறிய முடிகின்றது. பரப்புரையாக இலக்கியத்தைப் பயன்படுத்துகிற போது, தங்கள் கருத்தை நிறுவத் தொன்மக் கருத்தாடல்களைப் பயன்படுத்துவர். அந்த வகையில் களப்பிரர் காலப் புலவர்கள் தங்கள் படைப்புகளில் தொன்மக் கூறுகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றில் சமயம் சார்ந்த தொன்மங்கள், சாதி சார்ந்த தொன்மங்கள், மொழித் தொன்மங்கள் ஆகிய கூறுகள் இங்கு விளக்கம் பெற்றுள்ளன.

# அந்த வாழ்வு விரையுமா?

தேசிய நல்லாசிரியர் கழுகுமலை. **வை.பூ. சோமசுந்தரம்**

சங்கத் தமிழ்தான் செம்மொழி - அதுபோல்
சாதித்த துண்டோ பிறமொழி? (சங்கத்)

எட்டும் பத்தும் கண்டுதான் - பதின்
எட்டும் விண்டது பண்டுதான் (சங்கத்)

எழுத்தும் சொல்லும் பொருளுமாய் - நம்
ஒற்றம் விள்ளும் முருகினால்!
விழுதும் வேரும் நிறைந்துமே - மலர்கள்
விரிந்து கனிந்துமே சிறந்ததே! (சங்கத்)

மன்னர் மக்கள் பாடினார் - வாழ்வில்
மாண்புகள் என்றும் தேடினார்.
நன்னன் என்றொரு மன்னவன் - கொலை
நண்ணிய தாலே பின்னவன் (சங்கத்)

ஆந்தை யார்போல் யாருண்டு? - இன்று
ஆரிடம் இதுபோல் சீருண்டு?
வேந்தும் புலவரும் நண்பராய் - உயிர்
விடவும் ஒன்றாய் நண்ணினார் (சங்கத்)

பெற்ற வளத்தைப் பிறருமே - தம்போல்
பெற்றிட வழியும் கூறினார்
சுற்றம் மகிழத் தந்துமே - என்றும்
சொந்தம் போற்றிய நெஞ்சமே! (சங்கத்)

பொருள்துயிற் பிரிந்த தலைவனும் - சொன்ன
பொழுதில் திரும்பினான் விரைவினால்!
அருமை வாழ்வு வாழ்ந்தனர் - அந்தப்
பெருமை வாழ்வு விரையுமா?

# இரட்டைக் காப்பியங்களில் முற்பிறப்புச் சிந்தனை மரபு

முனைவர். மு.மீனா
முதல்வர் (பொ)
செந்தமிழ்க் கல்லூரி

## முன்னுரை

வரையறுக்கப்பட்ட 41 செவ்விலக்கிய நூல்களுள் இடம்பெறும் இரு காப்பியநூல்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும். காப்பியங்களின் முன்னோடியாகத் திகழும் சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்வின் தொடர்ச்சியாகவும் தனித்த கதைப்போக்கினை உடையதாகவும் திகழ்வது மணிமேகலை. இவ்விரு காப்பியங்களில் இடம் பெறும் முற்பிறப்புச் சிந்தனை மரபினை வெளிக்காட்டுவதே, இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## கருதுகோள்

முற்பிறப்புச் சிந்தனை நிலையில் இருகாப்பியங்களையும் நோக்குதல் அடிப்படையில், சிலப்பதிகாரம் மனித வாழ்க்கை தொடர்பான நிகழ்வுகளுக்கு முதன்மை இடம் அளித்துள்ளது; மணிமேகலையோ வாழ்க்கைக்கு வித்தாகத் திகழும் வினைக்கோட்பாட்டிற்கு முதன்மை இடம் அளித்துள்ளது என்பதே ஆய்வின் கருதுகோளாக அமைகின்றது.

## சிலப்பதிகாரத்தில் முற்பிறப்புச் சிந்தனை

அரசர்கள் மற்றும் தன்னிகரில்லாத் தலைவர்களை மையமிட்டு காவியங்கள் எழுந்த காலத்தில், சாதாரண மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக எழுந்த முதல் காப்பியமான சிலப்பதிகாரம் பிறப்பு பற்றிய சிந்தனையைச் சில இடங்களில் மட்டுமே சுட்டிக்காட்டியுள்ளது.

சிலப்பதிகாரப் பதிகத்தில் சீத்தலைச் சாத்தனார் கூற்றாக முற்பிறப்புச் செய்தி பதிவாகியுள்ளது. மதுரை மாநகரின் வெள்ளியம்பலத்துக் கோயிலில் சீத்தலைச் சாத்தனார் உறங்கிக் கொண்டிருந்த நல்இருளில் மதுராபுரித் தெய்வம் மதுரையை எரித்து விட்டு சீற்றத்துடன் இருந்த கண்ணகியின் முன்தோன்றி.

"கொதி அழல் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்! முதிர்வினை நுங்கட்கு முடிந்தது ஆகலின் முந்தைப்பிறப்பில் பைந்தொடி கணவனொடு சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்துச் சங்கமன் என்னும் வாணிகன் மனைவி இட்ட சாபம் கட்டியது ..." என்று கூறியதைக் கேட்டதாகச் சாத்தனார் உரைக்கிறார். இதில் குறிப்பாக மட்டுமே முற்பிறப்புச் சிந்தனை சுட்டப் பெற்றுள்ளது.

இக்குறிப்புச் செய்தியின் விரிவாக்கமாகக் கட்டுரை காதையில் கோவலனின் முற்பிறப்புச் செய்தி இடம் பெற்றுள்ளது. மதுராபுரித் தெய்வம் மதுரை எரியுண்டதன் காரணமாக வருத்தமுற்ற நிலையில் கண்ணகியிடத்து.

"மாதராய் ஈது ஒன்று கேள் உன் கணவற்குத்
தீதுற வந்த வினை" (கட்டுரை காதை : 29-30)

என்று கூறி கோவலனின் முற்பிறப்புச் செய்தியை விளக்குவதாக முற்பிறப்புச்சிந்தனை அமைந்துள்ளது.

சிங்கபுரத்தை வசு என்ற மன்னனும், கபிலபுரத்தை குமரன் என்ற மன்னனும் அரசாண்ட வேளையில் இருவரும் பகை உணர்வு கொண்டிருந்தனர். கபிலபுரத்தை சார்ந்த, பொன் அணிகலன்களை விற்பனை செய்யும் சங்கமன் என்னும் வணிகன் அதிக பொருள் ஈட்டும் ஆசையில் சிங்கபுரத்தில் விற்பனை செய்து வந்தான். அவன்மீது பொறாமை கொண்ட சிங்கபுரத்து மன்னன் வசுவிடம் தொழில் புரிந்து வந்த பரதன் என்பான், சங்கமனைக் கபிலபுரத்து ஒற்றன் என்று வசு மன்னனிடம் உரைத்து அவனைக் கொலைக்களப் படுத்துகிறான்.

சங்கமனின் மனைவி நீலி என்பவள் உயர்ந்த மலைமீது ஏறி,

"எம்முறுதுயரம் செய்தோர் யாவதும்
தம்முறு துயரம் இற்று ஆகுக" என்று சாபமிட்டு இறந்துபட்டாள். அதன் காரணமாகவே இப்பிறப்பில் பரதன் ஆகிய கோவலன் பாண்டியனால் கொலைக்களப்பட்டான் என்று குறிப்பிட்டது.

வரம்தரு காதையில் அரட்டன் செட்டி என்ற வணிகனின் இரட்டைப் பெண்குழந்தைகள் மற்றும் திருவனந்தபுரத்தில் திருமாலுக்குத் தொண்டு செய்யும் சேடக்குடும்பியின் மகள் ஆகிய மூவரின் முற்பிறப்புச் செய்தியைச் சுட்டுவதாக, கோவலனின் தாய், கண்ணகியின் தாய், மாதரி ஆகியோரின் மறுபிறப்புச் செய்தியை இளங்கோவடிகள் சுட்டியுள்ளார்.

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் சமைத்து வழிபாடு நிகழ்த்தும்போது கண்ணகி கோவில் அமைந்துள்ள உயர்ந்த மலையிடத்துள்ள சுனையில் நீராடினால் பழம் பிறப்பை உணரலாம்; எனவே அந்தச் சுனை நீரைச் சிறுமியர் மூவர் மீதும் தெளித்தால் அவர்கள் பழம்பிறப்பு அறிவர் என்று தெய்வமேறிய தேவந்தி மாடல மறையோனிடம் உரைப்பதாக இச்செய்தி இடம்பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், செட்டி மக்கள் இருவர், சேடக்குடும்பியின் மகள் ஆகிய மூவரின் முற்பிறப்புச் செய்திகள் சுட்டப்பட்டுள்ளன.

## உயிர் - வினை - பிறப்புத்தத்துவம்

உலகத்து உயிர்கள் ஒவ்வொன்றும் பற்பல பிறவிகளை

அடைகின்றன என்ற கருத்தாக்கம் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகின்றது. நடுகல் காதையில் உயிரின்தன்மை பற்றிய செய்தி இடம்பெறுகிறது. வானோர் வடிவில் இருக்கும் நல்ல உயிர் மண்ணுலகில் மனித வடிவில் பிறக்கவும் பிறக்கலாம்; மனித உடலை எடுத்த நிலைபெற்ற உயிர்கள் விலங்கு வடிவத்தை அடைந்தாலும் அடையலாம்; விலங்கு வடிவத்தில் இருக்கின்ற இனிய உயிர்கள் மிகுந்த துயரத்தையுடைய நரகராகி விடுதலும் உண்டு என்று (159-164).

யாக்கை, செல்வம், இளமையின் நிலையாமையை எடுத்துரைத்த மாடலன் உயிரின் தன்மையையும் செங்குட்டுவனிடம் உரைக்கின்றான். அதற்குக் காரணத்தையும் மாடலன் வழி இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

"செய்வினை வழித்தாய் உயிர் செலும்" சிலம்பு (167) என்று சுட்டுகிறார்.

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது சிலப்பதிகாரத்தின் முப்பொருள்களில் ஒன்றாகும். இதனையே மதுராபுரித் தெய்வம் கண்ணகியிடத்து,

'உம்மை வினை வந்து உருத்த காலை' என்று சுட்டுகிறது. மேலும், வரம் தரு காதையில், மாடலன் ;

"நல்திறம் புரிந்தோர் பொற்படி எய்தலும்
அற்புளம் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவது அன்றே; தொன்று இயல் வாழ்க்கை" சிலம்பு (136-140)

என்று சிலம்பில் உயிர்ப்பிறப்புத் தத்துவம் பேசப்பட்டுள்ளது. இக்கருத்தே கண்ணகி தெய்வமகளாக வானூர்தியில் செல்வதற்கு அவள்செய்த நல்வினையே காரணம் என்று கட்டுரை காதையில் இடம்பெறுகிறது.

"பீடுகெழு நங்கை பெரும் பெயர் ஏத்தி
வாடா மாமலர் மாரிபெய்து ஆங்கு
அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்த
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி ஏறினள் மாதே
கானமர் புரிகுழல் கண்ணகி" சிலம்பு (195-200)

மேலும்,

ஆடும் கூத்தர்போல், ஆருயிர் எடுவழி
கூடிய கோலத்து ஒடுங்கு நின்று இயலாது
செய்வினை வழித்தாய் உயிர் செலும். (நடுகல் காதை, 165-167)

என்றும், செம்மையிலார்க்குச் செய்தவம் உதவாது என்றும் வினையை அனுபவித்தே தீர வேண்டும் என்ற கருத்து சிலப்பதிகாரத்தில் வலியுறுத்தப் பெறுகின்றது.

## மணிமேகலையில் முற்பிறப்புச் செய்திகள்

சிலப்பதிகாரத்தில் கோவலன், கோவலனின் தாய், கண்ணகியின் தாய், மாதரி ஆகியோரது பிறப்புச் செய்திகள் சுட்டியிருந்ததற்கு மாறான நிலையில் மணிமேகலையிலோ சுதமதியின் முற்பிறப்புச் செய்தியிலிருந்து, மாதவி, மணிமேகலை, உதயகுமரன், புண்ணியராசன், (ஆபுத்திரன்,) கோவலன் ஆகியோரது முற்பிறப்புச் செய்திகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. 30 காதைகளைக் கொண்ட மணிமேகலையில் 7வது காதையான "துயிலெழுப்பிய காதை" முதல் 30ஆவது காதையான "பவத்திறமறுத்த காதை'' வரை முற்பிறப்புச் செய்திகளும் சிந்தனைகளும் இடம்பெற்றுள்ளன.

## சுதமதியின் முற்பிறப்புச் செய்தி

கோவலன் மற்றும் கண்ணகியின் இறப்பிற்காக மனம் வருந்திய மணிமேகலையை மலர் பறிப்பதற்காகச் சுதமதி உவவனத்திற்கு அழைத்துச் சென்று அங்கு உதயகுமரனின் வரவையறிந்து பளிக்கறையில் மறைத்து வைக்கிறாள். பளிக்கறையில் மாதவியைக் கண்ட உதயகுமரன் சித்திராபதியின் துணையுடன் மணிமேகலையை அடைவேன் என்ற எண்ணத்துடன் நீங்கினான். உவவனத்தில் சுதமதியும் மணிமேகலையும் துயிலும் போது, மணிமேகலா தெய்வம் வந்து மணிமேகலையை எடுத்துச் சென்று மணிபல்லவத்தீவில் வைத்தது. துயின்று கொண்டிருந்த சுதமதியை எழுப்பிய அத்தெய்வம்,

"பண்டைப் பிறப்பும் பண்புற வுணர்ந்தீங்
கின்றேழ் நாளிலிந்நகர் மருங்கே
வந்து தோன்றுமடக்கொடி நல்லாள்'' என்று மணிமேகலை தன்னுடைய பழம் பிறப்பை அறிந்து கொண்டு ஏழுநாட்கள் கழித்து வருவாள் என்று மணிமேகலா தெய்வம் சுதமதியிடத்து உரைத்தது. இவ்விடத்தில் தான் முதன்முதலாகப் பழம் பிறப்பு குறித்த செய்தி மணிமேகலை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.

பின்னர் சக்கரவாளக் கோட்டத்தில் அமைந்துள்ள உலகவறவியின் ஒரு பக்கத்தில் அமைந்திருந்த, முக்காலச் செய்தியையும் கேட்போருக்குச் சொல்லும் இயல்புடைய அற்புதப்பாவையின் வாயிலாகச் சுதமதி தன்முற்பிறப்புச் செய்தியை அறிந்து கொள்வதாக,

"இரவி வன்ம னொரு பெரு மகளே
துரகத்தானைத் துச்சயன் தேவி
தயங்கிணர்க் கோதைத் தாரை சாவுற
மயங்கி யானைமுன் மன்னுயிர் நீத்தோய்
காராளர் சண்னபயிற் கௌசிகன் மகளே
மாருதவேகனோ டிந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரையாகிய சுதமதி கேளாய்"

என்று சுதமதியின் முற்பிறப்பைச் சுருக்கமாகக் கூறிய தெய்வம்,

"இன்றேழ் நாளி லிடையிருள் யாமத்துத்
தன்பிறப் பதனொடு நின்பிறப் புணர்ந்தீங்
கிலக்குமி யாகிய நினக்கிளை யாள் வரும்"

என்று மணிமேகலையின் முற்பிறப்பைச் சுட்டிக் காட்டுகிறது.

அசோதர நகரத்து அரசனாகிய இரவிவர்மனுக்குத் தாரை, வீரை, இலக்குமி என்று மூன்றுபெண்கள். தாரையும் வீரையும் அங்கநாட்டின் கச்சயம் என்னும் நகரத்தரசன் துச்சயன் என்பவனை மணந்தனர். ஒருநாள் மதுவின் மயக்கத்தால் வீரை யானையொன்றினால் இடறப்பட்டு இறந்துபட்டாள். தன் தங்கையான வீரை இறந்ததை அறிந்த தாரை, அரண்மனையின் மாடத்தில் இருந்து கீழே வீழ்ந்து இறந்து பட்டாள்.

முன்னொரு நாள் மலைவளம் காண வருகை புரிந்த மூவரும் கங்கைக் கரையை அடைந்திருந்த போது அங்கே வந்த அறவண அடிகளை வணங்கினர். புத்ததேவர் ஆதிகாலத்தில் எல்லா உயிர்களும் துக்கம் நீங்கி இன்புற்று மகிழ வேண்டும் என்று தரும உபதேசம் செய்த போது அவரது பாதம் பட்ட, பாதபங்கய மலையைத் தரிசித்து வந்த அறவண அடிகள், இவர்களையும் அம்மலையைத் தரிசிக்குமாறு அறிவுறுத்தினார். அவ்வாறு மலையைத் தரிசித்த புண்ணியமே தாரை - சுதமதியாகவும், வீரை - மாதவியாகவும் பிறந்தனர் என்று அவர்களின் முற்பிறப்புச் செய்தி 10ஆவது காதையான மந்திரங்கொடுத்த காதை வாயிலாக அறியப் பெறுகிறது.

## மணிமேகலையின் முற்பிறப்புச்செய்தி

மணிபல்லவத்தீவில் தனித்து விடப்பட்ட மணிமேகலை, சுதமதியைக் காணாமல் வருந்தி, தன் தந்தையாகிய கோவலனை நினைத்து அழுது நின்றாள். அப்போது இந்திரனால் இடப்பட்டதும் தரிசிப்போர்க்குப் பழம்பிறப்பைத் தெரிவிப்பதுமாகிய புத்தபீடிகை வாயிலாகத் தன் பழம் பிறப்பை உணர்ந்தாள்.

அசோதர நகரத்தரசன் இரவிவர்மன் - அமுதபதியின் மகளாக இலக்குமி என்னும் பெயரில் பிறந்த மணிமேகலை, அத்திபதி - நீலபதி என்னும் அரசப்பெற்றோர்களின் மகனான இராகுலனின் மனைவி என்பதையும் உணர்ந்தாள்.

ஒருநாள் சோலையொன்றில் இராகுலனோடு ஊடியிருந்த இலக்குமியின் ஊடலைத் தணிக்க விரும்பிய இராகுலன் இலக்குமியின் அடியை வணங்குகிறான். அப்போது சாதுசக்கரன் என்னும் பௌத்த சாரண முனிவர் எதிர்ப்பட இருவரும் வணங்கி அவருக்கு உண்பிக்கின்ற செய்தியையும் இராகுலனே இப்பிறப்பில் உதயகுமரன் என்பதையும் உணர்ந்து கொள்கிறாள்.

## புண்ணியராசன்

சாவக நாட்டு மன்னன் புண்ணியராசன். அவனது முற்பிறப்பிலே ஆபுத்திரன் என்பவன் ஆவான். அபஞ்சிகன் என்னும் அந்தணனின் மனைவி சாலி தவறான ஒழுக்கத்தால் பெற்றெடுத்தக் குழந்தையைக் காட்டிடை விட்டுச்சென்றாள். அங்கு மேய்ந்து கொண்டிருந்த பசு அக்குழந்தைக்கு 7 நாட்கள் பாலூட்டி வளர்த்தது. அவ்வழியே வந்த குழந்தைப் பேறில்லாத பூதி என்னும் அந்தணன் அக்குழந்தையை எடுத்துச்சென்று வளர்த்து வந்தான். வேள்வி பசுவைக் காப்பாற்றியதன் காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்ட ஆபுத்திரன் யாவருக்கும் பிச்சையெடுத்து உணவளித்து வந்தான். இந்திரன் சாபத்தால் உழன்ற ஆபுத்திரன் மணிபல்லவம் வந்து பிச்சைப்பாத்திரத்தை (சிந்தாதேவி வழங்கிய) விட்டுவிட்டு உயிர்நீத்தான். பின்னர் சாவக நாட்டில் பசுவின் வயிற்றில் மகனாகப் பிறந்து சாவக மன்னனால் வளர்க்கப்பெற்று புண்ணியராசன் என்னும் பெயரில் அரசாட்சி செய்தான். ஆபுத்திரனின் மறுபிறப்புச் செய்தியாகப் புண்ணியராசன் பிறப்பு சுட்டப்பெற்றுள்ளது.

## கோவலன் முற்பிறப்பு வரலாறு

கபிலபுரத்தைச் சார்ந்த பொன்னாலான அணிகலன்களை சிங்கபுரத்தில் விற்றுக் கொண்டிருந்த சங்கமன் என்னும் வணிகன் மீது பொறாமை கொண்ட சிங்கபுரத்து அரசப்பணியாளன் பரதன் என்பவன் இவன் (சங்கமன்) பகைவனுடைய ஒற்றன் என்று அரசனுக்குச் சொல்ல வசு என்னும் மன்னனும் அவனைக் கொலை செய்வித்தான். சங்கமனின் மனைவி நீலி எமக்குத்துன்பம் செய்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக என்று சாபமிட்டு மலைமீதிருந்து வீழ்ந்து இறந்தாள். பரதனே கோவலனாகப் பிறந்தான் என்று கோவலனின் முற்பிறப்பு வரலாறு சுட்டப்பெறுகிறது.

## மணிமேகலையில் முற்பிறப்புச் சிந்தனை

சிலப்பதிகாரத்தைப் போலவே மணிமேகலையும் ஓருயிரானது பற்பல பிறவிகளை உடையதாய்த் திகழும் என்று மணிமேலை - உதயகுமரன் பிறப்பு வாயிலாகச் சுட்டுகிறது. காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் காயசண்டிகையின் வடிவிலிருந்த மணிமேகலையைத் தொடர்ந்து வந்த உதயகுமரனை வாளால் வெட்டிக் கொன்றான். அப்போது மணிமேகலை,

"திட்டி விடமுண நின்னுயிர் போநாள்
கட்டழ லீமத் தென்னுயிர் சுட்டேன்
உவவன மருங்கி னின்பா லுள்ளம்
தவிர்விலே னாதலிற் றலை மகடோள்"

என்று வருந்தியழுது உதயகுமரன் அருகே சென்றபோது கந்திற்பாவை அவளைத் தடுத்து.

உனக்கு இவன் கணவனாக இருந்ததும் இவனுக்கு நீ மனைவியாக இருந்ததும் சென்ற பிறவியிலே மட்டும் நிகழ்ந்தனவல்ல. அதற்கு முன்னமேயும் எத்தனையோ பிறவிகள் நிகழ்ந்தன என்பதனை.

"நினக்கிவன் மகனாத் தோன்றியதூஉம்
மனக்கினி யாற்கு நீ மகளாயதூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப் புளவாற்
கண்ட பிறவியே யல்ல காரிகை"

என்றுரைத்தது. மேலும் கந்திற்பாவையிடத்து மணிமேகலை தன்னுடைய மரணஇறுதி குறித்து வினவினாள். அப்போது,

காஞ்சிநகரம் சென்று எல்லா உயிர்களுக்கும் உணவளித்துப் பாதுகாப்பாய் என்றும், அறவண அடிகளின் உபதேசம் பெற்று நல்லறங்கள் பல செய்து இறந்து, மேலே வரும் பிறப்புக்களை உத்தர மகத நாட்டில் ஆண்பிறப்பாகவே பிறந்து, அருளறத்தினின்றும் நீங்காமல் வாழ்ந்து, முடிவில் புத்ததேவனுக்கு முதல் மாணாக்கனாகும் பேறு பெற்று பற்றற்று நிருவாணமடைவாய் என்றும் கூறுவதில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

சிலப்பதிகாரத்தில் ஓருயிரானது தேவராகவோ, மனிதனாகவோ, விலங்காகவோ, நரகராகவோ பிறப்பது வினையின் இயல்பிற்கேற்ப மாறுபடும் என்று சுட்டுகிறது. ஆனால் அக்கருத்திற்கு மாறாக, மணிமேகலை ஓருயிர் பற்பல மனிதப்பிறப்பு எடுப்பதாகச் சுட்டுகிறது.

இங்கு மற்றொரு கருத்தும் சிந்தித்தற்குரியது. மேலே வரும் பிறப்புகளை ஆண்பிறப்பாகவே பிறந்து இறுதியில் முக்தியடைதல் பற்றி மணிமேகலை பௌத்தசமய நோக்கில் சுட்டுகிறது.

சைன சமயத்தைச் சேர்ந்த பெண்டிர் ஆண்பிறவி எடுக்காமல் மேலுலகம் செல்லமுடியாது என்பதை ஸ்ரீபுராணம் தெளிவாக உணர்த்தும் என்று ச.வே.சுப்பிரமணியன் 'சிலப்பதிகார உரையில்' சுட்டியுள்ளமை இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

பிறப்பில் மனித உயிரானது அடையும் இன்பதுன்பங்களுக்குக் காரணம் முற்பிறப்பில் அவ்வுயிர் செய்த நல்வினை, தீவினையேயாகும் என்பதை மணிமேகலை வலியுறுத்திக் காட்டுகிறது.

முற்பிறப்பறிந்த மணிமேகலை, மணிப்பல்லவத் தீவில் மணற்குன்று, பூஞ்சோலை மற்றும் பொய்கைகளில் உலவி வந்தாள். அப்போது தீவதிலகை, 'கப்பல் கவிழப்பெற்ற மகளிர் போல இங்குத் தனியே வந்த நீ யார்?' என்று கேட்க அவளிடத்து மணிமேகலை தன் முற்பிறப்பு, இப்பிறப்புச் செய்திகளைக் கூறுகிறாள். மேலும் கோமுகி என்னும் பொய்கையில் புத்தர் பிறந்த வைசாக பூர்ணிமையன்று புத்தபீடிகையை வணங்கி நின்ற மணிமேகலை, கையில் உலகத்து உயிர்களுடைய பசித்துன்பத்தைப் போக்கும் அமுத சுரபி என்னும் பாத்திரம் கைவரப் பெற்றமைக்கான காரணத்தையும் சுட்டுகிறாள். திட்டிவிடத்தால் இராகுலன் இறந்தபோது, தான் தீப்பாய்ந்தமையையும் அந்தக் கடைசி தருணத்தில் சாதுசக்கரனுக்கு உண்பித்த நிகழ்வை மனத்தில் நினைத்துக் கொண்டே இறந்ததாலேயே தற்போது அமுதசுரபி பாத்திரம் கைக்கு வரப் பெற்றதாகவும் குறிப்பிடுகிறாள்.

திட்டிவிடத்தாலும், காஞ்சனின் கைவாளாலும் உதயகுமரன் இறந்ததற்குக் காரணத்தைக் கந்திற்பாவையிடத்து மணிமேகலை கேட்டபோது, கந்திற்பாவை இராகுலனும் இலட்சுமியும் பிரமதரும முனிவருக்கு உணவு உண்பிக்க முனைந்த போது சமைப்பதற்குத் தாமதம் செய்த மடையன் பயந்து நடுங்கி அது காரணமாக மடைக்கலம் சிதையும்படி வீழ்ந்தான். அவனின் தடுமாற்றத்தை உணராத இராகுலன் தாமதமேற்படுகிறதே என்ற கோபத்தில் மடையனைத் தோளும் தலையும் துண்டாகுமாறு வெட்டினான். வெட்டிய அவ்வினையினாலேயே உதயகுமரன் காஞ்சனனால் வெட்டுப்பட்டான் என்று வினை தன் பயனை ஊட்டாமல் ஒழியாது என்பது திண்ணம் என்று எடுத்துரைத்தது.

அதுபோலவே தாரையும் வீரையும் மாதவியும் சுதமதியுமாகப் பிறந்துள்ளனர். அவர்களின் வரலாற்றை அறவண அடிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள் என்று மணிமேகலா தெய்வம், மணிமேகலையிடம் உரைத்தது. மணிமேகலை அறவண அடிகளைச் சந்தித்த போது வினாவினாள். தாரை, வீரை இறந்து பட்டதற்குக் காரணம் பழவினைப் பயனாகும். ஆதலால் நீ வருந்தாதே என்று துச்சயராசனிடத்து உரைக்கும் செய்தியிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும்,

"பழவினைப் பயன் பரியலென் றெழுந்தேன்
ஆடுங் கூத்திய ரணியே போல
வேற்றோ ரணியொடு வந்தீர்"

என்று மாதவி சுதமதியிடத்துக் குறிப்பிடுகிறார்.

"ஆதிமுதல்வ னருந்துயர் கெடுக்கும்
பாதபங்கய மலை பரசின ராதலின்
ஈங்கிவ ரிருவரு மிளங்கொடி நின்னோடு
ஓங்குயர் போதி யுரவோன் றிருந்தடி
தொழுது வலங் கொண்டு தொடர்வினை நீங்கிப்
பழுதி னன்னெறிப் படர்குவர்" (108-113)

என்று வினை தீர்ந்து முக்தியடைவர் என்று சுட்டுகிறார்.

ஆதிரையளித்த பிச்சையை அமுதசுரபியில் முதலில் ஏற்று எல்லோருக்கும் உணவு வழங்கி வரும் காயசண்டிகை,

விருச்சிக முனிவனின் உணவான 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கிடைக்கக்கூடிய நாவற்கனியைக் காலால் இடறியதை,

"தீவினை யுருத்தலிற் செருக்கொடு சென்றேன்" என்றும்

"வெவ்வினை யுருப்பத் தென்றிசைப்
பொதியில் காணிய வந்தேன்" என்றும்

கடும்பசி பட்டேன் என்றன் பழவினைப் பயத்தால் என்று சுட்டுவதும் நோக்கத்தக்கது.

'ஊழ்வினை வந்திங் குதய குமரனை
ஆருயி ருண்டது" என்றும்

ஆராயாமல் காஞ்சனன் உதயகுமரனைக் கொன்றது.

'அவ்வினை விடாது உன்னை வருத்தும்'

என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சாதுசக்கர முனிவனுக்கு உணவளித்ததாலேயே மணிமேகலா தெய்வம் உன்னை உவவனத்தில் இருந்து தூக்கிச் சென்று புத்தபீடிகை

முன் வைத்தது என்ற செய்தியும் வஞ்சி நகரை அடைந்த மணிமேகலை கண்ணகி கோயிலிற் புகுந்து கண்ணகியை வணங்கி துதித்து மதுரையை எரித்ததற்கான காரணத்தை வினவ கோவலன் இறந்து படவும் கண்ணகி துன்பமடையவும் முற்பிறப்பில் அவர்கள் செய்த தீவினையே என்று மதுராபுரித் தெய்வம் கூறியதாகக் குறிப்பிடுகிறாள்.

பழம் பிறப்பிற் செய்த வினையின் பயனை யாரும் நுகர்ந்தே ஒழித்தல் வேண்டும் என்கிறது. தாங்கள் செய்த நல்வினையால் தேவர்களாகிச் சென்றோம் என்று குறிப்பிடும் கண்ணகி நல்வினையின் இறுதியில் கோபத்தால் உண்டாகிய பாவப்பயனை நுகர்தல் கூடும் என்று குறிப்பிடுகிறாள். இப்படிப் பிறந்தும் இறந்தும் புண்ணியத்தின் இறுதியில் பாவப் பயனையும், பாவத்தின் இறுதியில் புண்ணியப் பயனையும் நுகர்ந்து நுகர்ந்து உழல்வேம் என்றும் இறுதியில் புத்த தருமத்தைக் கடைபிடித்து முழுவினையும் தீர்ந்து நற்கதி அடைவதாகவும் குறிப்பிடுகிறாள். இதுவே பிறப்பின் தத்துவமாகக் கண்ணகி வாக்கு வாயிலாக மணிமேகலை சுட்டுவதாகும். இதே கருத்தையே மாசாத்துவான் தீவினையால் கொலையுண்டிறந்த நின் தந்தை நல்வினையால் தெய்வயாக்கை பெற்றுப் பின்னர் தீவினைப் பயனை அனுபவித்து அப்பால் புத்ததேவரின் தருமோபதேசத்தைக் கேட்டு வீடடைவான் என்று பிறர் வாயிலாகக் கேட்டதாக மணிமேகலையிடம் உரைக்கிறார். தீவினை நல்வினைப் பயன்களை அனுபவித்து வினைதீர்ந்த பிறகு உயிரானது முக்தியடையும் என்பதை மணிமேகலை காப்பியம் முழுமையிலும் பரவலாகச் சுட்டியுள்ளது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை ஆகிய இவ்விரு காப்பியங்களில் இடம்பெறும் காதைகளுள் உள்ளோட்டமாகத் திகழ்வது ஊழ்வினை என்னும் கருத்தாக்கமே. ஊழ்வினை என்பது உயிருக்கும் உடலுக்குமான வாழ்வியல் போக்குகளைத் தீர்மானிக்கக் கூடியதாகத் திகழ்கிறது.

சிலப்பதிகாரமானது கோவலன் செட்டிமகள் இருவர் சேடக்குடும்பி மகள் ஆகியவர்களது முற்பிறப்பைச் சுட்டியுள்ள நிலையில் மணிமேகலையோ 7ஆவது காதையிலிருந்து நிறைவுகாதை வரை பழம்பிறப்பைப் பேசுவதாகவே அமைந்துள்ளது.

இரு காப்பியங்களுமே வினையை அனுபவித்தே தீரவேண்டும் என்ற சிந்தனையை வலியுறுத்துகின்றன. கண்ணகி கோயில்

அமைந்திருக்கக் கூடிய மலை உச்சியில் உள்ள சுனை நீரில் நீராடினால் பழம் பிறப்பைத் தெரிந்து கொள்ளலாம் என்று சிலப்பதிகாரம் சுட்டுகிறது. புத்தபீடிகையைத் தரிசித்தால் புத்தபீடிகை வாயிலாகப் பழம் பிறப்பினை அறிந்து கொள்ள முடியும் என்பதை மணிமேகலை சுட்டிக் காட்டுகிறது.

செம்மை வழித்தாய் உயிர் செலும் என்றும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்றும்
உம்மை வினை வந்து உருத்த காலை

செம்மையிலார்க்குச் செய்தவம் உதவாது என்றும் பல இடங்களில் பேசப்பட்டாலும், சிலப்பதிகாரத்தில் பெரும்பான்மை நிகழ்வுகள் புகார் நகரத்தில் கோவலன் - கண்ணகி பிறந்து மதுரை நகரத்தில் இறந்து வஞ்சியில் உய்வடையும் வரை அவர்களின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்வுகளையே பெரிதும் பேசியுள்ளது. ஆனால் மணிமேகலையில் கோவலன் இறப்பிற்குப் பிறகு மணிமேகலை துறவு மேற்கொண்டு புத்த தருமங்களைக் கைபிடித்தல் என்ற நிகழ்வுகளுக்கு இடையில், பழவினைப்பயனால் கூத்தர் போல் வேறு பல வேடம் பூண்டு பிறப்பெடுத்தல் பற்றியும் தீவினை யுருத்தல், வெவ்வினை உருப்ப, பழவினைப்பயன், ஊழ்வினை வந்து ஆருயிர் உண்ணல், வினை தன் பயனை ஊட்டும், பழம் பிறப்பில் செய்த வினையின் பயனை யாவரும் நுகர்ந்தே ஒழித்தல் வேண்டும் என்றவாறெல்லாம் யாவரும் வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பது மணிமேகலையின் வாயிலாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பல பிறப்பெடுத்து புண்ணியத்தின் இறுதியில் பாவத்தின் பயனையும் பாவத்தின் இறுதியில் புண்ணியத்தின் பயனையும் மாறி மாறி அனுபவித்து, இறுதியில் புத்த தருமத்தை முழுவதுமாகக் கடைபிடித்து உயிரானது நிருவாணமடையும் என்பதும் காட்டப்படுவதுடன்,

இறுதியில் தொடர்ந்து பல பிறவிகளில் ஆண் பிறப்பெடுத்து, நிறைவாக முக்தி அடைதல் நிகழும் என்பதும் மணிமேகலையில் புலப்படுத்தப்படுகிறது.

இவற்றின் வழி, மணிமேகலா தெய்வம், கந்திற்பாவை, சம்பாபதி, மதுராபதி தெய்வம் முதல் மாடல மாறையோன் மற்றும் மாசாத்துவான் என மனிதப்பிறவி வரையுள்ள தெய்வம் மற்றும் மனிதர்களின் கூற்றாக, வினைக் கோட்பாட்டை முழுமையாக வலியுத்துவதாக மணிமேகலை காப்பியம் அமைந்துள்ளது என்பதே இவ்வாய்வு வழி புலப்படுத்தப்படுகிறது.

# வானம் ஒரு வகுப்பறை

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

நான்குசுவர் அறைச்சிறையை உடைத்துக் கொண்டு
நடுவீதி வாருங்கள்; வியப்பில் ஆழ்த்தும்
வானமெனும் வகுப்பறையுள் நுழைவீர்! கீழ்வான்
வண்ணமயப் பொன்தகடாய் ஒளிரக் காண்பீர்!
சேனையெலாம் தேரேறி நடத்தல் போலே
திசையெட்டும் முகிற்கூட்டம் கடலி னின்றே
ஆனமட்டும் நீர்மொண்டு பறக்கும்; ஆமாம்,
அம்மேகம் இலையென்றால் உயிர்கள் ஏது?

மண்ணின்றேல் பயிரில்லை; உண்மை; ஆனால்
மண்விதையின் கண்விழிக்க மழைநீர் வேண்டும்!
அண்ணாந்தே மரஞ்செடிகள் வானை நோக்கி
அரியதவம் புரிவதுமேன்? அதற்கே யன்றோ?
விண்மீன்கள் கண்சிமிட்டிக் கொட்டக் கொட்ட
விழித்திருக்கும் காரணமேன்? தங்கத் தட்டாய்
வெண்ணிலவும் மின்னுவதால் சுயந லத்து
வெறிக்கும்பல் சுருட்டிவிடும் என்ப தால்தான்!

நொடிக்குநொடி புதுக்கவிதை தீட்டிக் காட்டும்
நுண்மாய்த் திரையென்றால் வானந் தானே!
படுவான மலைவாயிற் குழம்பில் ஓடிப்
பரிதிமகன் குளிப்பதுமேன்? நெருப்புத் தேகக்
கடும்வெப்பம் தணிப்பதற்கே! அதற்குப் பின்னர்
காரிருளை விரிப்பதுமேன்? உழைத்த மக்கள்
நெடுந்துயிலில் மூழ்கிடவே என்பேன்! சொன்னால்
நீள்வான வகுப்பறையின் புதிரும் ஒன்றா?

# பாவேந்தர் மறுபக்கம்

தமிழாகரர் தெ. முருகசாமி
மேனாள் முதல்வர்,
இராமசாமி தமிழ்க்கல்லூரி.

புதுச்சேரியின் தவப்பயனால் கனகசபை - இலக்குமி அம்மையாம் தம்பதியரின் முத்தான முத்தமிழ் காக்கும் மூன்றாவது குழந்தையாகத் தோன்றியவர்தான் கனகசுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட நாடு புகழ் பாவேந்தர் பாரதிதாசனாவார்.

1891 ஏப்ரல் 29ஆம் நாள் பிறந்த அவர் 1895 முதல் 1908 வரையான காலத்தில் பிரெஞ்சுமொழிப் பள்ளியில் பயின்று, பின்னர் தமிழ்ப் பள்ளியில் பயின்றார். இவர் தமிழ்ப் பள்ளியில் பயின்ற காலமே மிகுதியாகும். புதுவைக் கல்வே கல்லூரியின் ஆசிரியர் திருப்புளிச்சாமி அய்யாவிடமும் சாரம் முதுபெரும்புலவர் மகாவித்துவான் பு.அ. பெரியசாமி அவர்களிடமும் புகழ்பெற்ற பைந்தமிழ்ப் பங்காரு பத்தரிடமும் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். கற்றதன் பெருமையால் புதுவை மாநிலத்திலேயே முதல் மாணாக்கராய்ப் புலவர் பட்டம் பெற்றார்.

இளமை தொட்டே, கவிதை எழுதும் ஆற்றல் இருந்த பாவேந்தருக்குத் தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்த போதினி, புதுவை கலைமகள், புதுவை முரசு என்ற ஏடுகள் அவர்தம் புலமையாம் கவிதை ஊற்றை வெளிப்படுத்தின. பாரதியார், வ.வே.சு. ஐயர், டாக்டர் வரதராசுலு, அரவிந்தர் போன்றோர் அடைக்கலம் தேடிப் புதுவைக்கு வந்தபோது அவர்களைத் தாங்கிக் காத்தார். 1910இல் பாரதியாரின் இந்தியா என்னும் ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்து வெளிவர உதவினார்.

பாவேந்தரின் பாட்டுப் பசிக்குத் தீனி போட்டதாக இருந்ததுதான் சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் என்ற ஏடாகும். இதற்கு முன்னுள்ள அவர்தம் கவிதைத் திறன் பற்றி அவரே கூறுவதாக அவர்தம் மகனார் மன்னர் மன்னன் பதிப்பித்த பாரதிதாசன் கவிதைகள் ஆய்வுத் தொகுதி ஒன்றில் (ப.24) "பாரதியாரோடு தொடர்பேற்படுவதற்கு முன்னர் என்னுடைய நிலையை நீங்கள் அறிய வேண்டும். நான் ஒரு தமிழாசிரியன்; மேலும் அக்காலங்களில் மக்கள் விரும்பிய நெறியில் பாடிக் கொண்டிருந்தவன். அக்காலத்து மக்கள் எங்கள் ஊர்ப்புறங்களிலும் சென்னை முதலான இடங்களிலும் உள்ள அவர்களால் விரும்பிய பொருள் கொடுத்து ஏற்றுப் பாடப் பெற்றன" - என 1904இல் எழுதப்பெற்றுள்ள பாவேந்தர் தரும் இந்த விளக்கங்களால், 'அவர் இறை வழிபாட்டு நெறியில் மிகுந்த அளவில் கவிதை புனைந்திருக்கிறார் எனத் தெரிகிறது. அப்பாடல்கள் கிடைக்காத நிலையில்தான் 1908இல் பாரதியாரின் சந்திப்பில் கிடைத்த முத்தான பாடல்தான், எங்கெங்கு காணினும் சக்தியடா என்பதாகும்' - என்கிறார் மன்னர் மன்னன்.

இப்பாடலின் தொடக்கம் கம்பீரத் தோற்றமுடையதாகும். பிறரைக் கவரும் வீறுகொண்ட அப்பாடலின் முகப்பு

காளையொருவன் கவிச்சுவையைக் - கரை
காண நினைத்த முழு நினைப்பில் - அம்மை
தோளசைத் தங்கு நடம் புரிவாள் - இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்
ஆ! எங்கெங்கு காணினும் சக்தியடா! - தம்பி
ஏழுகடல் அவள் மேனியடா!

என்பதாகும். இதைக் கேட்ட பாரதியார், "ஆரம்பம் சரியாக உள்ளது. விடாமுயற்சியும் தெய்வ பக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால் கவிதையிலே வலிமையேறும்" என்றார். உடனே பாவேந்தர் "நீங்களே எனது குரு" எனப் பாரதியாரின் சொற்பதங்களிலே மயங்கினார்.

1918இல் பாரதியார் புதுச்சேரியை விட்டு நீங்கிய பின்னும் பாவேந்தர் இறையுணர்வுப் பாடல்களைப் பாடிக் குவித்தார். 1920இல் மயிலம் சுப்பிரமணிய துதியமுதை இயற்றியதோடு மயிலத்திலிருந்து புதுச்சேரிக்கு மாசிமகக் கடலாட்டு விழாவிற்கு எழுந்தருளிய சுப்பிரமணியக் கடவுளின் தீர்த்தவாரிப் பந்தலிலே பாவேந்தர் தாம் வாயாரப் பாடி அந்நூலை வெளியிட்டுள்ளார் என அந்நூலை அச்சிட்டளித்த அச்சக உரிமையாளர் ஜெகநாதரின் நாட்குறிப்பில் உள்ள உண்மைத் தகவலாகும்.

இப்படியாகப் பாவேந்தர் சிறந்த ஆன்மீகவாதி என்ற அடையாளத்துடன் தோற்றமளிக்கா விட்டாலும் அந்தத் துறைச் சாயலில் பராசக்திப் பாடல்கள், இராமாயணக் கதைப்பாடல்கள், இலாவணிப்பாட்டு, மயிலம் ஸ்ரீ சுப்பிரமணிய பஞ்சரத்னப் பாடல்கள் போன்றவற்றை-யெல்லாம் பாடியுள்ளார் என்பதை அவர்தம் வரலாற்றிலிருந்து பிரித்தறியப்படாதவையாகும்.

ஆனால், 1933இல் சென்னையில் புரட்சியாளர் மா.சிங்காரவேலர் நடத்திய மாநாட்டில் தன்னை ஒரு நாத்திகனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். இருப்பினும் தமிழ்நலம் சார்ந்த எதையும் அவர் வெறுத்து ஒதுக்கியதில்லை. சைவத் திருமுறைகளிலும் வைணவ திவ்விய பிரபந்தத்திலும் அவர் ஆழங்கால்பட்டவராகவே திகழ்ந்துள்ளார். இவ்வுண்மையை அவர்தம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள நூல்களைப் பார்த்தால் அணில் கடித்த பழம்போல் தாம் சுவைத்த இடங்களில் கோடிட்டுள்ளதைக் கண்ணாரக் காணலாம்.

யாராவது நல்ல கவிதை எழுதவேண்டி விரும்பினால், 'சமய நூல்களைப் படித்தால, கவிதை வளமும் திறனும் பெறலாம்' என்பாராம். ஏனெனில் 'அவற்றில் உள்ள கடவுளைத் தள்ளு, தமிழ்தான் உயிர்ப்பாக உள்ளது' என்பாராம். ஒருமுறை தன்மகன் மன்னர் மன்னனுக்குத் தமிழைப் பயிற்றுவிக்கப் பேராசிரியர் சுந்தர சண்முகனாரிடம் கூறிய போது, 'திருவிளையாடல் புராணம் தொடங்கிச் சொல்லிக் கொடுங்கள்' என்றாராம். சுந்தர சண்முனார் சற்றுச் சிரித்தாராம். 'சண்முகம்! நான்

நாத்திகன்; கடவுள் புராணத்தைச் சொல்லித் தரச்சொன்னது சிரிப்பாக இருக்கலாம்! ஆனால், அதில் தமிழ் உள்ளது! கன்னித் தமிழின் ஊட்டமும் ஊற்றமும் பரஞ்சோதி முனிவரால் அள்ளித் தரப்பெற்றுள்ளதால், சொல்லித் தரக் கூறினேன்' - என்றாராம். என்னே பாவேந்தரின் தெய்வத் தமிழ்ப் பக்தி!

இந்த அடிப்படையில்தான் அவர் எழுதிய எதிர்பாராத முத்தம் என்னும் நூலில் குமரகுருபர சுவாமிகளை ஒரு கதாபாத்திரமாகவும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழின் தொடுக்கும் கடவுள் பழம்பாடல் என்பதையும் சேர்த்துக் கோத்துள்ளார் என அறியலாகிறது. இத்துடன் குமரகுருபரரின் இலக்கியங்களில் மிகுந்த ஈடுபாட்டால் புள்ளிருக்கும் வேளூரான வைத்தீசுவரகோயில் முத்துக்குமாரசாமியின் பிள்ளைத் தமிழின் வருகைப் பருவப் பாடலில், 'உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே!' என்றதை மட்டும் எப்போதும் பாவேந்தர் முணுமுணுத்துக் கொண்டே இருப்பாராம். இதைக் கேட்டவர்கள், 'முருகன்மீது கொண்ட பக்தியா? என்பார்களாம். 'இல்லை. குமரகுருபர சுவாமிகள் ஈரசையான சிறிய சிறிய சீரால் பாடிய சந்தப் பாடலை என்னென்பது?' என்பாராம்.

ஒருமுறை குற்றாலம் போய்விட்டு வரும்போது ஸ்ரீவைகுண்டம் வந்ததும் அந்த ஊர்ப் பெயரைக் கேட்டதும் 'இது மகான் குமரகுருபர சுவாமிகள் பிறந்த மண்' எனக் கூறி மகிழ்ந்து சற்று வண்டியை விட்டு இறங்கி மண்ணை மிதித்து விட்டுப் பயணித்தாராம். இச்செய்தியைத் தஞ்சையைச் சார்ந்த சித்திரக்குடிப் புலவர் ந. இராமநாதனார் கூறக் கேட்டுள்ளேன். பாவேந்தரின் நெருங்கிய நட்பினர் இராமநாதர். இதேபோல, 'வைணவ நூலான திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் பாடலில் பாவேந்தருக்கு மிகுந்த பற்றும் பயிற்சியும் உண்டு' என அவரிடம் படித்தவரான புதுச்சேரியில் 90 வயதுடன் வாழும் பாவலரான சித்தன் அடிக்கடி கூறுவதையும் நான் கேட்டுள்ளேன். அவற்றுள் ஒன்று: 'உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்' என்ற நம்மாழ்வார் பாடலில் நெட்டெழுத்தே இல்லை எனக் கண்டறிந்து கூறியவர் பாவேந்தர் ஒருவரே' எனச் சித்தன் கூறினார். என்னே பாவேந்தரின் எழுத்தெண்ணிப் படித்த திறன்!

இப்படியெல்லாம் பாவேந்தரின் ஆன்மீக மறுபக்கம் இருப்பினும் பாவேந்தர் என்றதும் அவர் ஒரு புரட்சிக் கவிஞர் என்ற நாத்திகத்தின் முத்திரைதான் அவரை அடையாளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் நாணயத்தின் ஒருபக்கம் நாணயத்திற்குரிய எண்ணைக் குறித்தாலும், மறுபக்கமான அரசாங்கச் சின்னமே (முத்திரை) அந்நாணயச் செலாவணி ஆவதற்கான அங்கீகாரம் என்பதால் பாவேந்தரின் முன்பின் வாழ்க்கையில் மலர்த்திய கவிதைகளின் கொழிப்பில் ஆன்மீகத்தினும் நாத்திகப் புரட்சிப் பாக்களே விஞ்சி நின்று நாட்டையும் நற்றமிழையும் வழிப்படுத்தின எனலாம்.

# வளாகச் செய்திகள்

1901இல் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த போதே, செந்தமிழ்க் கலாசாலையையும் தோற்றுவித்தார். செந்தமிழ்க் கலாசாலையே, பின்னர் 1957இல் செந்தமிழ்க் கல்லூரியாக மாற்றம் பெற்று, இன்று தமிழகத்திலேயே தனித்தமிழ்க் கல்லூரியாகவும், தமிழ் உயராய்வு மையமாகவும் செயல்பட்டு வருகின்றது. சிறப்புமிக்க செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளராகத் திரு. கோச்சடை குருசாமி அவர்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உயர்திரு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் ஜுன் 2017 வரை அவரது பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டு அரசாணை வழங்கப்பட்டது. திருமிகு கோச்சடை இரா. குருசாமி அவர்கள் மீண்டும் செயலாளர் பதவி நியமனம் பெற்றமையைப் பாராட்டி, மதுரைத் தமிழ்ச்சங்க நிர்வாகிகளும், செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு, கல்லூரிக்குழு உறுப்பினர்களும், செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மதுரைத் தமிழ்ச்சங்க அலுவலர்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும், வணக்கத்திற்குரிய துணைமேயர் கு. திரவியம் அவர்கள் (மதுரை மாநகராட்சி), முனைவர் திரு. சக்தி பெரியாண்டவர் அவர்கள், சேதுபதி நற்பணிமன்ற பொதுச்செயலாளர் திரு. மா. குழந்தைவேல் பாண்டியன் அவர்கள், திரு. நன்மாறன் அவர்கள், திரு. தர்மர் அவர்கள், பேராசிரியர் திரு. வெ. பெருமாள்சாமி அவர்கள், உசிலம்பட்டி முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் ஓய்வு பெற்ற தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சிவனு பாண்டியன் அவர்கள், விவேகானந்த கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. முத்தையா அவர்கள் மற்றும் பலர் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


2014-15ஆம் கல்வியாண்டில் செந்தமிழ்க் கல்லூரியில் இளங்கலை மற்றும் இளம் இலக்கியத்தில் புதிதாகச் சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்கு, பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் சார்பாக வரவேற்பு மற்றும் அறிமுக விழா 07.07.2014 அன்று நடைபெற்றது. அவ்விழாவிற்குச் செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு கோச்சடை இரா. குருசாமி அவர்கள் தலைமையேற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு இரா. அழகுமலை அவர்கள் முன்னிலை வகித்தார்கள். மதுரை மாநகரக் காவல்துறை உதவி ஆணையாளர் திரு. முனைவர் ஆ. மணிவண்ணன் (நில மோசடிப் பிரிவு) அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள். செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் திரு. சு. வீரணசாமி அவர்கள் மற்றும் மதுரைத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் மு. மீனா அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். பெற்றோர் சங்கப் பிரதிநிதி நன்றியுரை வழங்கினார். இவ்விழாவில் முதலாமாண்டு மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

09.07.2014 அன்று பாண்டியன் நூலகத்தில் வாசகர் வட்டம் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் மு. மீனா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் இளையகவியின் "ஒற்றையடிப் பாதை" என்ற கவிதைத் தொகுப்பு நூலை பா. சிவன் பாண்டி திறனாய்வு செய்தார். முதுகலை இரண்டாமாண்டு மாணவர் செ. ஸ்ரீமாறன் நன்றியுரை வழங்கினார். இதில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

செந்தமிழ்க் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையத்தில் 18.07.2014 அன்று மேலூர் அரசு கலைக் கல்லூரியின் தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் சு. பழனிக்குமார் அவர்களிடம் பகுதிநேரமாக ஆய்வு செய்த இ.மா.கோ. யாதவர் கல்லூரின் உதவிப்பேராசிரியை திருமதி. இரா. மாலா அவர்களுக்கு தமிழ்த் திரைப்படங்களில் தேசிய ஒருமைப்பாடு என்ற ஆய்வேட்டிற்கான பொது வாய்மொழித்தேர்வு நடைபெற்றது.

- முனைவர் **மு. மீனா**

# புலவரைச் சுமந்த மாமன்னர்



சி.வ.சு. ஜெகஜோதி

மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை 1901-ஆம் ஆண்டு நிறுவிய பெருமைக்குரியவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர். இவரோடு இணைந்து அச்சங்கத்தை உருவாக்கக் காரணமாக இருந்தவர்களுள் முதன்மையானவர் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரராக இருந்த மாமன்னர் பாஸ்கர சேதுபதி. இன்று வரை தமிழ்மொழி தழைத்தோங்கி வளர்ந்து கொண்டிருப்பதற்கு இவ்விருவரும்தான் முக்கிய காரணம் என்று கூறலாம்.

தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிய பிறகு அதன் மண்டல பூஜை நாளன்று அவைக்களப் புலவராக இருந்த ரா.ராகவையங்காரை முத்துப்பல்லக்கில் அமரவைத்து, மன்னரே சுமந்து கொண்டு மதுரையை வலம்வந்த பெருமைக்குரியவர். தனது வாழ்நாள் முழுவதும் அந்தத் தமிழ்ப் புலவரை சுமக்க நான்கு ஆட்களை சம்பளத்துக்கு நியமித்ததுடன் புலவரின் ஜீவனத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 635 (அன்று ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ.10 மட்டுமே), அரண்மனைக் கஜானாவிலிருந்து அவரே எடுத்துக் கொள்ளலாம் என சாசனம் மூலம் உத்தரவும் பிறப்பித்தார் மன்னர் பாஸ்கர சேதுபதி.

மன்னரின் பள்ளித் தோழரான திருப்புல்லாணி சீனிவாச ஐயங்காரின் குரல் வண்டின் ரீங்காரத்தைப் போலவே இருந்ததால், அவரை திருவையாற்றுக்கு தனது சொந்த செலவில் அனுப்பி வைத்து, தியாகராச சுவாமிகளின் சீடரான பட்டணம் சுப்பிரமணிய ஐயரிடம் இசை பயில வைத்த பெருமையும் மன்னரையே சேரும். அவரே பின்னர் பூச்சி சீனிவாச ஐயங்கார் என உலகப் புகழ் பெற்றார். பிற்காலத்தில் அவரையே இராமநாதபுரம் சமஸ்தானத்தின் வித்வானாகவும் ஆக்கி அழகு பார்த்ததுடன் அவர் மூலமாக ஏராளமான தில்லானாக்களும், ஜாவாலிகளும் உருவாக்கப்பட்டன. சங்கீத கலாநிதி என்று புகழ் பெற்ற அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் போன்றவர்களையும் உருவாக்கினார்.

இராமநாதபுரம் ராமலிங்க விலாசம் அரண்மனையில் மகா.வைத்தியநாதய்யர் ராகம் பாட, பட்டணம் சுப்பிரமணிய ஐயர் தாளம் போட, குன்றக்குடி கிருஷ்ணய்யர் பல்லவி பாட எனப் பல்வேறு வழிகளில் தமிழ் தழைத் தோங்கி வளர்ந்து, மடை திறந்த வெள்ளம் போல ஓடியிருக்கிறது.

## தமிழ்த் தாகத்திலேயே மன்னரின் உயிர் பிரிந்த வரலாறு

மன்னர் பாஸ்கர சேதுபதியின் முதுகில் ராஜபிளவை ஏற்பட்ட காரணத்தால், 1903-ஆம் ஆண்டு அவர் ஓய்வெடுப்பதற்காக

திருவாடுதுறை ஆதீன மடத்தின் கிளையான நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சி மடத்திலே ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். உடல் வலியால் மன்னர் சிரமப்படுவதை அறிந்த ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், மன்னரைத் தேடிவந்து அருகில் அமர்ந்து அற்புதமான தமிழ்ப்பாடல்களைப் பாடினார். அப்பாடல்களை ரசித்து, தனது கழுத்தில் அணிந்திருந்த நவகண்டி மாலையைப் பரிசாக வழங்க முடிவுசெய்தார். அப்போது, புலவரான ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர் தனது சிரத்தை தாழ்த்திட, 5 நிமிடங்களாகியும் மாலை விழாமல் மன்னரின் கைகளிலேயே இருந்ததாம். இதை நிமிர்ந்து பார்த்த புலவரோ, மன்னரின் உயிர் பிரிந்திருப்பதைக்கண்டு அலறி துடிதுடித்துப் போனாராம்.

உயிர்போகும் நிலையிலும் தமிழை வளர்த்த அந்த மாமன்னர் பாஸ்கர சேதுபதியின் உடலை ஆங்கில அரசு நெல்லை மாவட்டம் கல்லிடைக்குறிச்சியிலிருந்து மதுரைக்கு ரயிலில் கொண்டு வந்தது. பின்னர் மதுரையிலிருந்து இராமேசுவரத்திற்கு முதல் முதலாக ஒரே ஒரு ரயில் பெட்டியில் அவரது உடலை மட்டும் வைத்து 7 மணி நேரத்தில் இராமநாதபுரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். மதுரை - இராமேஸ்வரம் ரயில் பாதையில் முதல் முதலாக தமிழுக்காக தன்னையே தியாகம் செய்த அந்த மாமன்னரின் உடல் தான் இராமநாதபுரம் வந்திருக்கிறது. மாமன்னரின் இறுதி அஞ்சலியை ஆங்கிலேய அரசு மன்னரின் மூலமாக தமிழுக்கும் செய்திருக்கிறது.

நன்றி : தினமணி, தமிழ்மணி, நாள் : சூன் 1, 2014

# வாசகர் வாசகம் ①

வெங்கோடை இடைபொழியும் வான்மொழிநேர் செந்தமிழ்
வந்தது, 'மே'. முக்கனிநேர் முத்தமிழின் சீர்எலாம்
தங்கிஓங்கும் நற்பணிசெய் தகைசான்ற மதுரைத்
தமிழ்ச்சங்க முப்பெரும்நல் விழாச்செய்தி, படி(த்)தேன்!
இதழ்மணத்தின் தொடக்கவரி, இன்பமுள்ளம் நிறைத்ததே!
தினேசுகாட்டும் தமிழரரண் படங்களொடும் நன்றே!
இதம்அகப்பா விளக்கமேற்கோள் பெருமழையார் தருகவின்
இங்கிதமாய் எடுத்துரைத்தார் அருள்செல்வன்! வாழியர்!
மலையமான்பா 'பெயர்ப்பலகை தமிழ்வளர்க்கும்' மீச்சுவை!
'வலதுகைசட் டைக்குமட்டு மேஇருந்த து'என்னும்
கலைஎழுத்து படைப்புகோரி தரல்ஆயும் பூங்கொடி
கட்டுரை,ஐ இருகொன்றை பெயர்சுட்டி விசுவிழா
கலைமலராம் மரபுசுட்டி கடுக்கைசுட்டி, வளர்மதி
கட்டுரைத்த ஆக்கம்;பஞ் சுநூலாதல் கருங்கல்
சிலையாதல் கருத்தாடல்நேர் ஜான்சியுரை; செந்தமிழ்
சீர்சொல்லும் அறிவரசன் பாஇனிய! போற்றுவோம்!

அன்புடன், புலவர் **சி. பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# கம்பர் எழில்பா, ஏரெழுபது?

புலவர் சி.பாண்டுரங்கன்
ஆம்பூர்.

## உழவு

'சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.'

'இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'. - திருவள்ளுவர்

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்!' - பாரதியார்

'உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில் மிகும்....' -
சுந்தரனார்

உலகம் உய்ய, உயிர்கள் வாழ, முதன்மைத் தேவைகளில் முதலிடம் பெறுவது உணவு. மாந்தர்க்கு உணவுப்பொருள்களை விளைத்து உதவுகின்ற உழவுச் சிறப்பைத் தனிநூலாகப் படைத்துத் தமிழுக்கு அணி சேர்த்தார் கவிப்பேரரசர் (கவிச்சக்கரவர்த்தி) கம்பர்; அந்நூலே, 'ஏரெழுபது!'

ஆயிரம் நதிகளின் கூட்டணியாகத் திகழும் உயிர்நதி, 'கங்கை'. கங்கை என்னும் சொல்லால் முதல் அடியைக் கம்பர் தொடங்கினார்.

'கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க...'காராளர் என்னும் சொல், உழவரைக் குறித்தது. கார்மழைமேகம். வரையாது வழங்கி வளர்ச்சியின் வித்தாகும் சொல்லை எடுத்தாண்ட அழகே அழகு! ஏர் என்னும் சொல், 'உழவு, மாடு, கலப்பை, அழகு, வளர்ச்சி, நலன்' எனப் பலபொருள் குறிக்கும் சொல். இந்நூலைப் படித்துச்சுவைக்கும் வாசகர், அத்தனை பொருள்களுமே நிரலாகப் பொருந்தி மகிழ்வூட்டுவதை அறிந்து இன்புறலாம்.

## சமரச வழிபாடு

இந்து சமயம் ஆறு அகச்சமயம் கொண்டிலங்குவதென ஆன்மீகப் பெரியோர் உரைப்பர். ஏரெழுபது முதல் பாடலில் யானை முகத்தவனையும், அடுத்த பாடலில் பிரம்மன் திருமால் சிவபெருமான் ஆகிய மூவரையும், மூன்றாம் பாடலில் கலைமகளையும் வழிபாடு செய்து தொடர்கிறது. எனவே, கம்பரின் சமய சமரச உள்ளம் இதனால் வெளிப்படுதல் திண்ணம்.

79 நாடுகளைத்தன் செங்கோல் சிறப்பினால் ஆள்பவன் சோழன் : (பாயிரம், பா. 5)

...."இடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கறீரே!"

**செய்யுளணி வழங்கும் தேவர்**

'ஆழித் தேவர்...
ஊழித் தேவர்....
வாழித் தேவர்....
மேழித் தேவர்....' என, அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவந்து எதுகை நயமூட்டுதலையும், தேவர் என்னும் சொல் அணியாய் நிற்றலையும் வாசகர் கண்டு மகிழலாம் (பாயிரம், பா. 7).

இந்நூல் எழுந்தபின், தோராயம் ஐந்நூறாண்டின் பிறகு எழுந்த முக்கூடற் பள்ளு (பா. 27), தேவர் என்னும் சொல் பயன்படுத்துவதை ஒப்புநோக்கின், உழவியலோடு இணைந்து வளர்ந்த ஆன்மீக வழித்தடம் புலப்படும்! அப்பாடல்

தேவாதி தேவர்திரு முக்கூட லின்பெருமை
நாவால் வழுத்திவள நாட்டியல்பு கூறியபின்
பூவா சனைசேர் புரிகுழலார் பூங்குயிலே
கூவா யென்றந்தக் குயில்மொழியைக் கொண்டாரே!

**உழவர் சிறப்பு**

கம்பரின் ஏரெழுபது பாவில், உழவர் சிறப்பை உள்ளங் குளிரப் பாராட்டினார் இப்படி

'...உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே!' -பாயிரம், 8.

இவ்வடி, திருவள்ளுவரின் கருத்தை நினைவூட்டும் :

உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து
உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை. - திருக்குறள், அதி. 104 உழவு

**தாய்போல் காக்கும் உழவர்**

'தாயெலாம் அனையஎன் தந்தையே',
'தாயினும் சாலப்பரிந்து' என்றெல்லாம் தாயின் அன்பு பேசப்படுகிறது. உயிர்களுக்கு உணவுப்பொருள் விளைத்தளிக்கும் உழவர்பணியின் சிறப்புக்குத் தாய்காக்கும் செயலை உவமையாக்கி மகிழ்கிறார். கம்பர்

அழுங்குழவிக் கன்புடைய தாயேபோல் அனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளர் எளியரோயாம் புகழ

உழுங்கொழுவிற் கருவீறி உலகமுதல் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகம் செய்வானேல்!
-பாயிரம், பா 9.

வான்புகழ் கொண்ட வள்ளுவனார்,

"பலகுடை நீழலும் தம்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நீழ லவர்" என்றார். இக்கருத்தை அடியொற்றி ஏரெழுபது காட்டும் வரி

'...விறல்வேந்தர் பெருங்குலமும்.... தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிகர் உண்டாகிற் கூறீரே!

## பொன் ஏர்பூட்டல்

நன்னாளில் ஏர்உழவு தொடங்குவதைப் பொன்னேர் பூட்டல் என்றும் பொன்னேர் உழவு செய்தல் எனவும் இன்றும் சிற்றூர்களில் சொல்வர் செய்வர். கம்பர், ஏர்மங்கலம் பொழிய இனிதுஉழ நன்னாள் கொள்ளும் வழக்கத்தைப் பாடலில் வைத்தார். தொடர்ந்து பாடிய கருத்துகள்

நீர்விழாவழி ஏர்விழா கொள்ளலே, போர்விழாவில் வேந்தன் வெற்றிபெற வழிகோலும்.

நாற்படை வெல்ல, ஏர் (அலப்படைவாள்) உதவும். இன்று, 'மேழிச்செல்வம் கோழைபடாது' என்பது பழமொழி. இக்கருத்தை ஒரு பாடல் நிறைவு அடியாக வைத்தார்.

'மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே!'

கலப்பை, நுகம், நுகத்துளை, சீராணி, பூட்டும் மங்கலக்கயிறு, நுகம்பகடு பிணிக்கும் தொடை (கயிறு), கொழுவளம், உழுகலப்பைக் கொழுவாணி, எரடிக்குஞ் சிறுகோல், எருதுகளின் வலிமை, எருதின் சிறப்பு என நிரலாகக் கூறும் கம்பர், உழவில் ஏர் இழுக்கும் மாடுகளின் பிடரியில் ஏற்பட்ட தழும்புகளைப் பாடும்போது, சங்கத்தமிழ், நாடுகாக்கும் மறவன் தன் நெஞ்சில் ஏற்ற விழுப்புண்ணைப் பாடிய மரபு நினைவில் வந்து நிற்கின்றது; நெஞ்சம் நெகிழ்கின்றது; வைக்கோலும் வரகின் தாளும் தான்தின்று, தன்னைக் காப்பவன் உண்டு வாழ நெல்லும் கேழ்வரகும் விளையும் வழிகோலப்பிடரியால் சுமை இழுத்துப் பெருமை மிகு தழும்பு பரிசாக ஏற்று வாழும் மாடு, நம் மதிப்பினில் உயர்ந்து நிற்கிறது. அதனாலன்றோ வள்ளுவப் பேராசான்,

'மடுத்தவா யெல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து'

என வாழ்வியலின் வெற்றிக்கதை நாயகனுக்குப் பகடு வினையாற்றலைச் சுட்டிக் காட்டி மகிழ்ந்தார்! செல்வத்தையே 'மாடு' எனச் சுட்டிக்காட்டி, தமிழ்ச் சமுதாயமும் மகிழ்ச்சிப் புரவியில் விரைந்ததன்றோ!

'கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை'

-என்னும் திருக்குறளும் சான்று பகரும்.

அதனாலன்றோ, தீங்கைத் தானேற்று, நலனாம் அமுதைப் பிறர்க்களித்த சிவனாரின் அருள்மிகு திருவிளையாடல், கம்பரின் பாடலில், முதலிரண்டு அடிகளில் முந்திவந்து நின்று, உவமையாகி, உழவுமாட்டின் உன்னத உழைப்பைப் பாராட்டியது, இப்படி

கண்ணுதலோன் தனதுதிருக் கண்டத்திற் படிந்தகறை
விண்ணவரை அமுதூட்டி விளங்குகின்ற கறையென்பார்
மண்ணவரை அமுதூட்டி வானுலகம் காப்பதுவும்
எண்ணரும்சீர்ப் பெருக்காளர் எருதுசுவல் இடுகறையே!

கண்நுதலோன் - நெற்றிக் கண்ணை உடையவரான சிவபெருமான்.

<u>ஒப்புநோக்கல் :</u> சிவபுராணம்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழில்ஆர் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்நிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்,....

## ஏர் நடக்குமெனில், இயலிசை நாடகம் நடக்கும்

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கும் எனில் புகழ்சால் இயல்இசைநா டகம்நடக்கும்
சீர்நடக்கும் திறம்நடக்கும் திருஅறத்தின் செயல் நடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே!

கார் - மழைமேகம்

காராளர்-உழவர்; நூல் முழுமையிலும் விரவிய இச்சொல்லழகு, சிந்தனைக்குரியது.

நடக்கும் என்னும் சொல்லால் அணிக்கொடை நடந்தது; 'நடக்கமாட்டாதே' என, முரண்தொடை கிடந்தது !

## தமிழ்மறையைப்போற்றிய தகைசால் கம்பர்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். - திருக்குறள் : 1033

பொன்நிகர் இப்பாடலின் விளக்கமாகவே பூநிகர் ஏரெழுபது பாஒன்றை இயற்றி வள்ளுவம் தலைமேல் வைத்துக் கொண்டாடி மகிழ்ந்தார் கம்பர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ இவருடனே இயலுமிது
பழுதுண்டோ கடல்சூழ்ந்த பாரிடத்தில் பிறந்தோர்க்கே!"

## மூன்று தேவியர் அருள்

'களை எடுக்காத பயிர் கால் பயிர்' என்பர்; களை நீக்குவதால் பயிர்விளைச்சல் முழுமை பெறும். களைவெட்டி மூவகை.1. கூர்முனைக் களைவெட்டி (களைக்கொத்தி, களைக்கொட்டி) 2. அகன்ற நுனிக்களைக் கொட்டி 3. மண்வெட்டி. முதல் இருவகை, ஒற்றைக்கையால் பணிசெய்ய உதவுவன. மூன்றாம் வகை இருகையாலும் பயன்படுத்தவும், நீர்க்கால் மடை மாற்றவும் உதவும். கொட்டி எனவும் கொட்டு எனவும் வழங்குவர். கொட்டு இருக்கக் குறையொன்றும் இருக்காது; செல்வம் (திருமகள்), கலைகள் (கலைமகள்), வெற்றி (கொற்றவை) ஆகிய அனைத்து நன்மைகளும் கொட்டுவின் பயன்கொண்டு உழைக்கும் உழவர்க்கு மேலோங்கியிருக்கும் என்னும் கருத்தை இனிதுரைக்கும் கம்பர்பா ஏரெழுபது

'மட்டிருக்கும் திருமாது மகிழ்ந்திருக்கும் பூமாது
முட்டிருக்கும் செயமாது முன்னிருப்பார் முதுநிலத்து
விட்டிருக்கும் கவிதொலைத்து வேளாளர் தடக்கையினில்
கொட்டிருக்க ஒருநாளும் குறையிருக்க மாட்டாதே'.

வேளாளர் - உழவர். உயிர்கள் வாழ உணவுப் பொருள் விளைத்து வழங்குவதால், 'தடம் கை' எனச் சிறப்பித்துக் கூறினார். 'பழையனூர்க் காரியன்றீந்த களைக்கொட்டு' என ஔவையார் வியந்ததை நினைக!

'வரப்புயர...' என வாயாரப் பாடி இவர் வாழ்த்தியதை வரலாறு பேசும். வரப்பின் சிறப்பை, ஏர்எழுபதும் பதிவுசெய்தது இப்படி

....பொய்வரம்பு தவிர்த்தருளும் புவிமடந்தை திருமைந்தர்
செய்வரம்பு திருத்தாரேல் திசைவரம்பு திருந்தாதே.
செய்வரம்பு = வயலில் அமைத்த வரப்பு.

## எரு

தலைமேல் எருக்கூடையைத் தாங்கிச் சென்று வயலில் இட்டு நிலமகளை வணங்குவர் வேளாளர், என்றார் கம்பர். இக்கருத்தை வள்ளுவர், ஈரடியில் வைத்தார் இப்படி

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

**சேறு, சோறு**

'சேற்றில் கைவைக்காவிட்டால்,
சோற்றில் கைவைக்க வழியேது?' -என்பர்.

'மதிப்பதெல்லாம் சேற்றினையே வளம்படுதல் பொருட்டாயே? என்றார் கம்பர். இவ்வளமையின் பயனைத்தானே ஔவையாரும் பாராட்டினார் இப்படி: '...மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து-'....

**நெல்நாற்று**

'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்...' என்னும் கருத்தைக் கரும்பின் நேர் குறட்பாவில், பெருமழையினை முன்காட்டும் தூறல்போல, உழவு அதிகாரத்துக்கு 5 இடையிட்டு முன்காட்டி, உவமையாக்கி, குடிமையைச் சிறப்பித்தார் வள்ளுவனார்.

**கம்பர் பா**

'....... உலகத்தின்
முறைமயங்கா தவர்வயலின் முளைமயங்காத் திறத்தாலே

**நாற்றுமுடியால் சிறக்கும் நானில வேந்தர்முடி**

மாணிக்கம் முதலாய மணிஅழுத்தித் தொழில் சமைத்த
ஆணிப் பொன் முடிவேந்தர் அணிமுடியும் முடியாமோ
பேணிப்பைங் கோலமுடி பெருக்காளர் சுமவாரேல்
சேணுக்கும் திசைப்புறத்தும் செங்கோன்மை செல்லாதே!

உலகத்தில் பகடுழக்கும் ஓங்குமுடித் திறல்வேந்தர்
அலறத்.திண் பகடுழக்கும் அதுவுமொரு முனையாமோ
உலகத்தில் பகடுழக்கும் உயர்முடிகொள் வேளாளர்
சிலவருழச் சிலவர்நடும் அவையன்றோ திருமுனையே!

**நெல்பயிர்**

.....'செழுஞ்சாலி நன்னாற்றைக்
கைப்பாங்கு பகுத்துநடக் கற்றாரே கற்றாரே!

இப்பாடல்களைப் படிக்கும்போது, சீவகசிந்தாமணி, நெல்பயிரைச் சிறப்பித்து, முரண்பட்ட மாந்தரியல்புகளையும் சூல்கொண்ட பசுமைநிற அரவையும் தக்க உவமைகளாக்கி, குத்திட்டு வளர்தல், நெல்பால் பிடித்தல், நெல்முற்றிக் கதிர் தலை சாய்ந்து நிற்றல் ஆகியன பாடிய பா, நினைவில் நிழலாடும்.

## முக்கூடற்பள்ளு பாஅடியும் நினைவில் எழும்

பொருநையம் திருநதியின் இருகரையும் இருபூவும்
பூஞ்சாலி விளையவே கூவாய் குயிலே!

<u>பொருள் :</u>

பெருமைமிகு நீர்வளத்தின் தாமிரபரணி நதியின் இருகரை நன்செய்வயல்களிலும், ஆண்டில் இருபோகம் பூஞ்சாலி நெல்விளையக் குயிலே கூவுவாயாக!

## நெல் பயிர்வளம் காட்டும் ஏரெழுபது அடிகள்

'....ஏர்வளரும் திருவளரும் இசைவளரும் கடல்சூழ்ந்த
பார்வளரும் காராளர் பயிர்வளரும் திறத்தாலே!
'....ஏற்றமே கொடுநாளும் இறைத்துலகம் விளைவித்துக்
காத்துமே உயிர்வளர்த்தல் காராளர் தம்கடனே!'
'...பட்டாங்கு பகர்ந்தோர்க்கும் பசியகலப் பைங்கூழை
நட்டாரே வையமெல்லாம் நலம்திகழ நட்டாரே!'
'....பார்தாங்கும் மன்னுயிரின் பசிதாங்கும் பைங்கூழின்
நீர்தாங்கு வாரலரோ நிலந்தாங்கு கின்றாரே!'

"திரு அடையும் திறல் அடையும் சீரடையும் செறிவடையும்
உரு அடையும் உயர்வடையும் உலகெலாம் உயர்ந்தோங்கும்
தரு அடையும் கொடையாளர் தண்வயலில் செஞ்சாலி
கருவடையின் பூதலத்தில் கலி அடைய மாட்டாதே!'
(தரு - கற்பகமரம்; கலி - ஏழ்மை)

## உழவர், உணவுப் பொருள் ஈபவர்

அரிவுண்ட பொற்கதிரை நெற்கதிர்நேர் ஆதுலர்க்குப்
பரிவுண்ட பெருவார்த்தை புதிதன்று பழைமைத்தே
விரிவுண்ட கடற்படியும் மேகங்கள் மறுத்தாலும்
திரிவுண்டோ காராளர் செயலினுக்குச் செப்பீரே!

## வேளாளர் விளைக்கும் நெல், பொலிவு

விற்பொலியும் பெருங்கீர்த்தி வேளாளர் விளைவயலில்
நெற்பொலியுண் டாமாகில் நிலமகளும் பொலிவுண்டாம் ;
பொற்பொலிவுண் டாமுலகம் புகப்பொலிவுண் டாம்புலவோர்
சொற்பொலிவுண் டாங்கலியின் துயர்பொலிய மாட்டாதே!
...செந்நெல்லைப் பொலிவாலே செம்பொன்மலை யெனக்குவித்தே
அந்நெல்லின் பொலியாலே அவனிஉயிர் வளர்ப்பாரே!'
நெலபொலி - நெல்குவியல்.

### விதைநெல்

திருத்தோட்டுப் பிரமாவால் செனிக்கின்ற உயிர்களுக்கும்
உருத்தோட்டும் புகழுக்கும் உரிமைமுறை வளர்க்கின்ற
வரைக்கோட்டுத் திணிபுயத்து வளர்பொன்னித் திருநாடர்
விரைக்கோட்டை கொண்டன்றோ வேந்தரிடும் கோட்டைகளே!
(திருத்தோட்டுப் பிரமா - தாமரையில் வீற்றிருக்கும் பிரமா.)

### பொன்குடை

பொன்குடைக் கீழ் அரசாளும் சிறப்பினும், உலக உயிர்கள் ஓங்க உணவை விளைத்துப் பணிசெய்யும் உழவர்பெற்ற பேறு பெரிதாகும் எனக் கம்பர் உணர்த்தும் பாடல் இதோ -

அரியா தனத்தின் மேலிருந்தே
  அம்பொன் குடைக்கீ ழரசியற்றும்
பெரியார் பக்கல் பெறும்பேறும்
  பேறே யல்ல பெருக்காளர்
சொரியா நிற்பச் சிலர்முகந்து
  தூற்றா நிற்பச் சிலரளந்து
புரியா நிற்பப் பெறும் பேறுக்
  கதுநே ரொக்கப் போதாதே!

### பொதுவாக....

நூல் முழுமையும் பரவலாக, சோழ அரசின் சிறப்பு, மழைநீரைத் தாய்ப்பாலைக் குழந்தைக்கூட்டும் தாய்போல் நெல்பயிர்க்கூட்டும் பொன்னியைச் சிறப்பிக்கும் அடிகள், அரசர் வணிகர் போர்வீரர் புலவர் என வாழ்வியலின் பலதட்டுகளில் பயணிப்போரின் வெற்றிவாழ்விற்கு வித்திடும் உழவர்பணிச்சிறப்பு, நெல் விளைக்கும் படிகளில் உதவும் கருவிகள், ஏற்றம், பகடு, நெற்களச் சிறப்பு, நெல்லின் உயர்வு, உழவரின் சிறப்பான பணிகள் கூறிப் பாராட்டியுள்ளார்.

### பொன்னி

பொன்னிநதி, பொன்னிநாடர் பாராட்டும் பாக்கள் ஏராளம் உள. அவற்றிலிருந்து, சில அடிகள் சில பாடல்கள் காண்போமா?

### ‘பொன்னிநாடன்முடி அணியாகும் பா

தென்னன்முடி சேரன்முடி தெங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கள்முடி
இன்னமுடி யன்றியும்மற் றெடுத்துரைத்த முடிகளெல்லாம்
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றோ!

மணிமுடி, நெல்நாற்றுமுடி, முதன்மை ஆகிய பொருள்களில், முடி என்னும் சொல் ஒன்பதுமுறை வந்து அணிக்கொடை ஆயிற்று.

## மேற்கோள் அடிகள்

....'மடைவாளை வரும்பொன்னி வளநாடர்...'
....'மாற்றாத காவேரி வளநாடர்....'
....'திளைத்துவரும் செழும்பொன்னித் திருநாடர்...'
....'கார்பூட்டும் கொடைத்தடக்கைக் காவேரி வளநாடர்...'
....'குரம்படிக்க மணிகொழிக்கும் குலப்பொன்னித் திருநாடர்....'
'கார்தாங்கும் காவேரி நதிதாங்கும் காராளர்....'
....'......மணிகளையும்.......வரும்பலவின்
சுளைகளையும் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்....'
....'ஊற்றேறும் குலப்பொன்னி உறைநாடர்.....'
....'*சீராளும் செழும்பொன்னித் திருநாடர்....*'

## ஏர்வாழி இசைவாழி

பார்வாழி நான்மறைநூற் பருணிதரா குதிவாழி
கார்வாழி வளவர்பிரான் காவேரி நதிவாழி
பேர்வாழி பெருக்காளர் பெருஞ்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தொன் பதுநாடே! - கம்பர்

## ஏரெழுபது, கம்பர் எழில் நூல்

ஏர்எழுப தென்னும் எழில்நூலின் கம்பர்,நல்
சீர்உழவைப் போற்றிச் சிறப்புடனே - கார்ப்பயன்
நேர்எனவே தந்தார்பொன் நேர்உழவர் நற்பணியைப்
பார்பயிலப் பைந்தமிழில் பா!

# வாசகர் வாசகம் ②

### செந்தமிழ் மிளிர்ந்தது

நனைகவுளை ஐம்பொறியார் விளக்கிக் காட்ட
நற்கோயில் வரலாறும் வழிபாடாற்றும்
புனைவுகளும் சூர்யகாந்தன் படைப்பின் உத்திப்
புலப்படுத்தும் பலவுத்தி அறிந்து கொண்டோம்.
நினைவுறுத்தித் திருமுறையின் திருத்தொண்டைத்தான்
நெறிப்படுத்தல் இதழ்முழுக்க வழிந்தே ஓட
வனைந்திட்ட தமிழர்தம் மறுமைக்கோட்பா
டறிவூட்டல் செந்தமிழில் மிளிர்ந்த தம்மா!

அன்புடன், **பாவலர் அறிவரசன்,** திருலோக்கி.

**செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடயியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலைவியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –

தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 July 2014 Post Regd. No. MA/130/2014-2016

Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, 6575615

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2014–2015ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.**

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.